

# ரமணோதயம்

அக்டோபர் 2024
காலாண்டு

அண்ணாமலை தீப இதழ்
விலை ₹ 20

# ரமண கேந்திரா டிரஸ்ட் - சென்னை

## ஸ்ரீபகவான் 145ஆவது ஜயந்தி நாள்

*செவ்வாய்க்கிழமை, டிசம்பர் 17, 2024*

*இடம்: அனந்தசாமி ஞான மண்டபம்*
*41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர்*

*நிகழ்ச்சி நிரல்*

காலை

| | |
|---|---|
| 6.00 a.m. | மங்கள இசை/நாதஸ்வரம் |
| 7.00 a.m. | மஹன்யாசம், ஏகாதச ருத்ர ஜபம், அபிஷேகம் |
| 10.00 a.m. | ஸ்ரீ ரமண சஹஸ்ரநாம அர்ச்சனை |
| 10.45 a.m. | தமிழ்ப் பாராயணம்: "அக்ஷர மணமாலை" |
| 12.15 p.m. | அன்னதானம், தீபாராதனை |

மாலை

| | |
|---|---|
| 4.00 p.m. | விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் |
| 4.30 p.m. | சிறப்பு சொற்பொழிவுகள் |
| 5.30 p.m. | கலை நிகழ்ச்சிகள் |
| 6.45 p.m. | மயிலை மாடவீதிகளில் ஸ்ரீபகவான் திருவுருவப் படம் வீதியுலா |
| 7.15 p.m. | "அக்ஷரமணமாலை" - கூட்டுப் பாராயணம், தீபாராதனை |

# ரமணாலயம், குரோம்பேட்டை, சென்னை

## ஸ்ரீபகவான் 145ஆவது ஜயந்தி விழா

இடம்: 6, ராஜேந்திரபிரசாத் சாலை, நேருநகர், குரோம்பேட்டை

*செவ்வாய்க்கிழமை, டிசம்பர் 17, 2024*

*நிகழ்ச்சி நிரல்*

முற்பகல்

| | |
|---|---|
| 7.00 | மங்கள இசை |
| 8.00 | வேதபாராயணம், ரமண அஷ்டோத்ர பூஜை |
| 9.30 | திருவாசக செந்நாவலர் திரு. சத்குருநாத ஓதுவார் (மயிலை கபாலீஸ்வரர் திருக்கோயில்) அவர்களின் ரமண சந்நிதிமுறை பண்ணிசை |
| 11.00 | அக்ஷரமணமாலை, புனர்வசு வண்ணம் பாராயணம் |
| 11.30 | ஆரத்தி, சிறப்பு விருந்து (பிரசாதம்) |

*145 ஆவது ரமண ஜயந்தி விழா, ரமணாச்ரமத்திற்கு பாத்தியப்பட்ட திருச்சுழி – சுந்தர மந்திரம், மதுரை – ரமண மந்திரம் மற்றும் இராமநாதபுரம் – முருகனார் மந்திரம் ஆகிய இடங்களிலும் கொண்டாடப்படவுள்ளது.*

உதயம் 24 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 1

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அண்ணாமலை தீப இதழ்
அக்டோபர் 2024

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அண்ணாமலை தீப இதழ், அக்டோபர் 2024


| வ.எண் | பொருள் | ப.எண் |
|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | 3 |
| 2 | இனிவரும் திருநாட்கள் | 9 |
| 3 | ஸ்ரீ ரமணாஸ்ரம நூற்றாண்டு நிறைவு விழா டாக்டர் வேங்கட் S ரமணன் | 11 |
| 4 | ஔவைக் குறள் ராம் மோஹன் | 23 |
| 5 | அணிலும் அனுமனம் D. தியாகராஜன் | 29 |
| 6 | தட்சிணாமூர்த்தி தோத்திரம் சிதம்பர குற்றாலம் | 41 |
| 7 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | 45 |
| 8 | ரமண புராணம் ஆகுரா | 59 |
| 9 | அனுபூதியருள் ஸத்ய நாராயணன் | 69 |
| 10 | ஸ்ரீ ரமணாஸ்ரம நூற்றாண்டு நிறைவு விழா - செய்தித் தொகுப்பு - குமார் ராஜா | 71 |
| 11 | செய்திகள் | 77 |

# ஆசிரியர் உரை

## தன்னுயிரில் மன்னுயிரைக் கண்டவர்

பகவான் மலைவாசஸ்தலத்தில் இருந்தபோது வானரப் பட்டாளங்கள் பகவானையே தம் தலைவராகக் கொண்டு இருந்தது ஓர் அற்புதம். தாம் செய்யும் அனைத்துக் காரியங்கட்கும் அவை பகவானின் ஒப்புதலைப் பெற்றே செய்தன. பகவானும் வானரங்களும் தமக்கென பாஷை ஒன்றை வகுத்துப் பேசவில்லை. அவை, அன்பு தோய்ந்த தம் இதய மொழியில் பேசிக் கொண்டன.

மலையடிவாரத்தில் ஆஸ்ரமத்தை அமைத்த பின்னர், “நமது பசங்கள் தமது எல்லை தாண்டி இங்கே வரமாட்டார்களே” என்று வருத்தப்பட்டார் அனைத்தையும் கடந்த கருணைக் கடல். இவர்கள் (குரங்குகள்) தங்களது குழாமிற்கு “இதுதான் எல்லை என்று வகுத்து உள்ளனர். அத் தாண்டி வந்த அடுத்த குழாத்தினர் எல்லைக்கு வர முடியாது அதனால் மலைக் குரங்குகள் இங்கே வர முடியாதே?” என்று விசனப்படுவார்.

சிலநாட்களில் தமது எல்லை தாண்டி பகவானைக் காண வராமல் இருந்த வானரங்கள் பிரிவுத் துயர் தாள முடியாமல் ஒரு நாள் குடுகுடுவென அனைத்துக் குரங்குகளும் பகவானை காண வந்து விட்டன. பகவான் அவர்கள் அனைவரையும் அன்புடன் விசாரித்து, தின்பண்டங்களைத் தந்தார். பிரிய மனமில்லாமல்

அவர்கள் திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டு சென்றன. இந்த மனம் நெகிழும் நிகழ்ச்சியை பகவானின் அணுக்கத் தொண்டர் குஞ்சு சுவாமி, அழகுற வர்ணிக்கிறார்.

பகவானின் கண்களில் முட்டும் கண்ணீரோடு அருகே இருப்பவர்கள் கேள்விகட்கு பதில் சொல்ல முடியாது, மனதில் பேரன்பு பெருக திரும்பினார். ஞானிகளின் சிகரமான பகவான் பக்தியிலும், அன்பிலும் மூழ்கி கண்ணீர் வடித்தார்.

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
'தம் உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்றார்
'யாவர் அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம் பெருமான் நடம்புரியும்
'இடம் என நான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என்
'சிந்தை மிக விழைந்த தாலோ. (திருவருட்பா 5298)


என வள்ளலார் வரையறுத்த பேரன்பின் லக்ஷணமே பகவான்தான்.

முதலில் இறைவனை வேறாக எண்ணி உருகிடும் பக்தி, பின்னர் அவனே தானாகி விடும் ஞானம், அப்புறம் அவனே எல்லாமும் என்ற ஞானோத்திர நிலை அனைத்தையும் பகவான் எடுத்துக் காட்டினார்.

"பகவான் கண்ணில் இப்படி கண்ணீர் வரலாமா?" என்ற அன்பரின் கேள்விக்கு பகவான்,

"அனைத்து உயிரையும் தானாக எண்ணி, அவற்றின் அனுபவத்தைத் தன் அனுபவமாக எண்ணுதலே ஞானியின் ஸ்வபாவம்" என்று பதிலிறுத்தார்.

பவ்வ வெண்திரை கொழித்த தண்தரளம்
 விழியு திர்ப்பமொழி குளறியே
பாடி யாடியு ளுடைந்து டைந்தெழுது



*பாவையொத் தசைத லின்றியே*
*திவ்ய அன்புருவ மாகி அன்பரொடும்*
*இன்ப வீட்டினி லிருப்பனோ*
*தெரிவ தற்கரிய பிரம மேஅமல*
*சிற்சு கோதய விலாசமே.*

என்ற தாயுமானவர் பாடலை இங்கு நினைவு கூரலாம். அசையாத பொம்மை போன்று அசலமாய் இருந்த பகவான் தன் கண்கள் கண்ணீர் முத்துக்களைச் சொரியும் அன்பு உருவமாகவும் இருந்தன.

வழக்கமாக குரங்குக் கூட்டத்திற்கு ஓர் எல்லை உண்டு. எல்லை தாண்டி வந்தால் வேறு கூட்டத்துக் குரங்குகள் அதை உள்ளே விடாது. எல்லை தாண்டிச் சென்ற குரங்கை அதன் மூலக் கூட்டமும் மீண்டும் சேர்த்துக் கொள்ளாது. ஆனால் பகவானின் எல்லையற்ற பேரன்பு, இந்த விலங்குக் கூட்ட மரபுகளையும்

முற்றிலும் மாற்றியது. ஒரு மலைக் குரங்கு, அடிவாரக் குரங்குக் கூட்டத்திற்கு வந்தால் அடிவாரக் குரங்குகள் அவற்றை விலக்கியதே இல்லை.

இராமாயணத்தின்படி இலங்கைக்கு சேது கட்டும்போது, ஓர் அணிலின் சேவை ராம பிரானுக்குக் கிடைத்தது. இங்கோ அணில் கூட்டத்திற்கு பகவானின் சேவையும், நட்பும் கிடைத்தது. அவரது ஆசனத்துக்கு மேலேயே அவை கூடுகட்டி விளையாடும். அவரே அதற்கு முந்திரிப் பருப்பினை ஊட்டுவார்.

ஒருமுறை ஆஸ்ரமத்தில் முந்திரிப் பருப்பு கையிருப்பு தீர்ந்தவுடன் வேர்கடலை போன்ற சாதாரணப் பருப்பை வைத்து விட்டனர். ஓர் அணில் அந்த சாதாரண பருப்பை சாப்பிட மாட்டேன். முந்திரிப் பருப்பு தான் வேண்டும் என்று சண்டித் தனம் செய்தது. பகவான் பண்டகசாலைக்கு ஆள் அனுப்பி விசாரிக்கும்போது, பிக்ஷையில் பாயசத்திற்கு வேண்டிய மிகக் குறைந்த அளவே முந்திரிப் பருப்பு இருப்பதாகவும் பதில் கிடைத்தது. அதை அறிந்த பகவான், “இங்கே பாயசத்தில் முந்திரி வேண்டும் என்று அழுகிறார்களோ? இந்தக் குழந்தைகள் வேண்டும் என்று கேட்பதற்குத் தராமல் பிக்ஷை கைங்கர்யம் செய்வது பெரிய புண்ணியம்தான்” என்று சீறினார். பதறிப் போன சிப்பந்திகள் மீதம் இருந்த பருப்புகளை அணில்களுக்கு அனுப்பி விட்டனர்.

ஆச்சரியம்! அன்று மாலையே சென்னை டாக்டர் நாராயண அய்யர் இரண்டு வீசை முந்திரிப் பருப்புகளை “ஏதோ எனக்குத் தோன்றியது?” என்று கூறி அனுப்பி வைத்தார்.

இதைக்கேட்ட பகவான், முகத்தில் புன் சிரிப்பு மிளிர, “பார்த்தீர்களா, தமக்கு வேண்டியதை இந்தப் பையன்களே சம்பாதித்து விட்டார்கள். இவை அனைத்தும் அவர்களுக்குத்தான். உக்கிரான அறைக்கு அல்ல.” என்று அறுதியிட்டார். அதேபோல் பின்னர்

ஒருசமயம் குரங்குகளுக்கும் *priority* இல் தேன்குழல் கிடைத்தது.

ஆஸ்ரமத்தில் இருந்த ஏராளமான பசுக்களில் பகவானது பேரன்புக்கு பாத்திரமான பசு லக்ஷ்மி பகவானின் தீவிர பக்தையான எச்சம்மாவின் மறு பிறவிதான் என்பது பல்லோரின் நம்பிக்கை. ஓர் அதிசயம் பல கன்றுகளை ஈன்ற பசு லட்சுமி தனது கன்றுகளை பகவானின் ஜயந்தி அன்றுதான் ஈனுவாள்.

தன்னை எப்போதும் சுத்தமாக வைத்திருக்கும் லக்ஷ்மி ஒருநாள் சாணியும் சகதியுமாக பகவானின் அறைக்குள்ளே வந்து விட்டாள். விலங்குகள், பறவைகள் உட்பட அனைத்து ஜீவன்களின் இதய மொழிகள் அனைத்தையும் அறிந்தவர் அல்லவா பகவான். லட்சுமியைத் தேற்றித் தடவிக் கொடுத்தபின், "அவளது மூக்கில் துவாரம் மூலம் கயிறுபோட முயற்சித்திருக்கிறார்கள். அவர்களிடம் இருந்து தப்பித்து என்னிடம் ஓடி வந்து விட்டாள்" என்றார்.

"வழக்கமாக சுத்தமாக உள்ளே வரும் லட்சுமி இன்று ஏன் சாணியும் சகதியுமாக ஓடி வந்திருக்கிறாள்?" என்று அன்பர்கள் வினவினர்.

உடனே பகவான், "நமக்கு ஒரு தொல்லையோ, துன்பமோ ஏற்பட்டால், குளித்து, தலைவாரி, அலங்காரத்துடனா இறைவனிடம் முறையிடுகிறோம்? இருந்த நிலையிலேயே வேண்டுகிறோம் அல்லவா?" என்றார் பகவான்.

தாயறியாத என்று உளதோ? கன்றும் தன் தாயை அறியும். நீ அறிது எப்பொருளும்.

மற்றொரு அற்புதக் கருணை அலை வீசும் நிகழ்ச்சி. கார்த்திகை தீபத் திருவிழாவின் போது ஏராளமான மக்கள் கிரிப் பிரதக்ஷிணம் செய்வர். அவர்களில் பலர் பிரதக்ஷிண பாதையில் அமைந்துள்ள ரமணாஸ்ரமத்திற்கு

வந்து பகவானையும் வணங்கிச் செல்வர். இவர்களில் பெரும்பாலோர் நாகரீக உடையற்ற கிராமத்து பக்தர்கள். இந்தக் கார்த்திகையன்று பெருமழையும் பெய்யத் தொடங்கி விட்டது. பகவானைத் தரிசக்க வரும் மக்கள் சேற்றுக் காலுடனும், அழுக்குமாக வந்து, பகவானின் சோஃபாவை நெருங்கி பகவான் அருகாமையயை அழுக்கும் சேறுமாக நிறைக்கின்றனர். பகவானைத் தரிசக்க வரும் பாமர மக்கள் பகவானின் மிக அருகாமையில் நெருங்கி தொந்தரவு செய்து, அழுக்கையும் சேற்றையும் அறையெங்கிலும் பரப்ப வேண்டுமா என்று யோசித்த நிர்வாகிகள், அன்று இரவு, பகவானது கட்டிலை வழக்கமான இடத்தில் இருந்து பல அடிகள் தள்ளிப் போட்டு விட்டனர். தடுப்பு வேலியும் கட்டிலில் இருந்து மிகத் தள்ளி போடப்பட்டது. இதன் மூலம் பகவானின் அருகாமையில் அன்பர் வருவது தடுக்கப்படும் என்று நிர்வாகிகள் எண்ணினர். அப்போது தூரத்தில் இருந்தே, அன்பர்கள் பகவானை கண்டு செல்லலாம் அல்லவா!

மறுநாள் காலை அங்கு வந்த நிர்வாகக் குழு ஒரு மாற்றுக் காட்சியைக் கண்டனர். தடுப்பு கிராதிகள், நிர்வாகிகள் செய்தபடியே வழக்கமாக இடத்தில் இருந்து பல அடிகள் தள்ளிப் போடப்பட்டு இருந்தன. பகவானும் தனது கட்டிலை முன்பு இருந்தபடியே தடுப்புக் கம்பிக்கு மிக அருகே இழுத்துப் போட்டுக் கொண்டு பாமர மக்களின் வேண்டுகோள்களை உன்னிப்பாக கேட்டுக் கொண்டு இருந்தார்.

ஆஸ்ரமத்தின் கட்டளைகட்டு எல்லோரையும் போலத் தானும் கீழ்ப்படிய வேண்டும் என்று எண்ணிய பகவான், நிர்வாகிகளிடம் தடுப்புக் கம்பிகளை முன்னிருந்த இடத்திற்கே மாற்றச் சொல்லி உத்தரவு போடவில்லை. பதிலாக, தன் இருக்கையை அதன் அருகில் இழுத்துச் சென்று இருக்கிறார்!

பயந்து போன அதிகாரிகள், “பகவானே! தங்கள் உடல் நலத்தையும், சுகாதாரத் தேவையையும் கருதித்தானே இருக்கைக்கும், தடுப்பிற்கும் இடைவெளி இருக்குமாறு நகர்த்தி வைத்தோம்” என்று வினயத்துடன் வினவினர்.

பகவானோ, “ஆசிரம நிர்வாகத்தின் ஏற்பாட்டை மீற வேண்டும் என்ற எண்ணம் எனக்கில்லை. கிரிப்பிரதக்ஷிணம் செய்து வரும் பக்தர்கள் அனைவரும் அருணாசலனின் ஸ்வரூபம் அல்லவா? அவரது சாமிப்யத்தை எனக்குத் தந்து அவர்கள் அல்லவா எனக்கு நலம் புரிந்து உள்ளனர்!” என்றார்.

தன்னுயிரின் மன்னுயிராகக் கண்ட மஹானின் சரிதையை மீண்டும் காண்போம்!

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்

# இனிவரும் திருநாட்கள் 2024

| பூஜை/விழா/பண்டிகை | ஆங்கில தேதி | |
|---|---|---|
| நவராத்திரி விழா தொடக்கம் | 03-10-2024 | வியாழன் |
| சரஸ்வதிபூஜை | 12-10-2024 | சனி |
| விஜயதசமி | 12-10-2024 | சனி |
| தீபாவளி | 31-10-2024 | வியாழன் |
| கார்த்திகை தீபோற்சவம் துவக்கம் | 04-12-2024 | புதன் |
| கார்த்திகை தீபம் | 13-12-2024 | வெள்ளி |
| பகவான் 145 ஆவது ஜயந்தி | 17-12-2024 | செவ்வாய் |



# ஸ்ரீ ரமணாஸ்ரம நூற்றாண்டு நிறைவு விழா

## டாக்டர் வேங்கட் S ரமணன்

*(டாக்டர் வேங்கட் S ரமணன், ஆஸ்ரமத் தலைவர், 17 ஜூலை அன்று சென்னையில் ஆற்றிய சிறப்புரையின் தமிழாக்கம்.)*

*ஆத்ம ஞானத்தை நாடிச் செல்லும் பாதையில் பயணிக்கும் ஸஹ்ருதய ஆத்மாக்களே!*

*இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வரும் ஸ்ரீ ரமணாஸ்ரம நூற்றாண்டு விழா வைபவத்தில் உங்களுடன் பங்கேற்க வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் பெருமகிழ்வு கொள்கிறேன். சென்னை மாநகரின் பக்தி ததும்பும் மக்கள் ஆஸ்ரமத்தின் நூற்றாண்டு கால யாத்திரையில் இடைவிடாத உறுதியான ஆதரவை அளித்து வந்துள்ளனர். 'நம்ம சென்னை' பெருநகரில் இப் பெரும் இறுதி விழா நடைபெறுவது சாலப் பொருத்தம்.*

*என்னுடைய இன்றைய உரையில் நான் மூன்று தலைப்புகளைக் குறித்துப் பேச உள்ளேன். சென்னை நகரில் ரமண இயக்கத்தின் சுருக்கமான வரலாறு, பகவானின் போதனைகளை உயிர்ப்புடன் வைத்திருக்க உதவும் சத்சங்கங்களின் முக்கியத்துவம் மற்றும் ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் மரபைப் பேணும் பெரும் சேவை.*

*முதலில் சென்னை ரமண கேந்திரத்தின் வரலாறு:*

*'ரமண பக்த சபா' என்ற பெயர் கொண்ட முதல் சத்சங்கம் 1950 இல் பேராசிரியர் கே.எஸ். சுவாமிநாதன் அவர்களால் அவரது இல்லமாகிய 'தர்மாலயத்தில்' பகவான் மஹா நிர்வாணம் எய்திய சில வாரங்களுக்குள் ஸ்தாபிக்கப்பட்டது. ஒவ்வொரு வாரமும் இங்கே*

*சத்சங்கக் கூட்டங்கள் நடைபெற்று வந்தன. ஆராதனை மற்றும் ஜயந்தி போன்று ஆண்டுதோறும் வரும் சிறப்பு தினங்களும் கொண்டாடப்பட்டு வந்தன. பேராசிரியர் சுவாமிநாதன் டில்லிக்கு இடம்பெயர்ந்த பின்னர், அவரது மகளான டாக்டர் சாந்தா ராமச்சந்திரனும் கணவர் ஆர். எஸ். ராமச்சந்திரனும் வாராந்திர சத்சங்கங்களைச் சென்னையில் தொடர்ந்து நடத்தி வந்தனர். டாக்டர் டி.என். கிருஷ்ணஸ்வாமி, ஸ்ரீ ஈஸ்வரன் போன்ற சென்னைவாசிகள் சத்சங்கத்திற்குப் பேராதரவு வழங்கி வந்தனர். பின் தலைமுறை வழிவந்த P.E. சங்கர், அஸ்வின், ரமணகுமார் போன்றோரும் ரமண கேந்திரத்தின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து தொண்டாற்றி வருகின்றனர். 1978 ஆம் ஆண்டு ஸ்ரீ அனந்த ஸ்வாமி தலைமை ஏற்றபின், ரமண பக்த சபா, ரமண கேந்திரம் என்ற பெயர் சூட்டப்பட்டது. இந்த ரமண கேந்திரமே பரவிவரும் ரமண பக்த சமூகத்திற்கு உறுதியான அஸ்திவாரமாய்த் திகழ்கிறது. ரமணோதயம் இதழின் ஆசிரியரும் மவுண்டன் பாத் இதழின் ஆசிரியர் குழு உறுப்பினருமான ராம் மோஹன், ரமண கேந்திரத்தின் நீண்டநாள் தூணாக அமைந்துள்ளார்.*

*சென்னை ரமண கேந்திரத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அவர்தம் சேவைக்காகவும் பல்லாண்டு கால அர்ப்பணிப்பிற்காகவும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன். 2011 இல் துவங்கப் பெற்ற குரோம்பேட்டை ரமணாலயம் பகவான் உபதேசங்களைப் பரப்புவதில் பெரும்பங்காற்றி வருகிறது. குரோம்பேட்டை ரமணாலயம் வளர்ந்து வருவதில் பெரும் தொண்டு ஆற்றிவரும் குமார் ராஜாவுக்கு நான் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.*

*மிகச் சமீபகாலத்தில் தியாகராய நகரில் புதியதாக ஒரு ரமண மையம் அமைக்கப்பட்டுள்ளது. வெகு விரைவிலேயே இந்த மையம் ரமண பக்தர்களுக்கு ஒரு*

*பெருநிதியமாக உருவெடுக்கும் என்பது திண்ணம். இதன் பொறுப்பாளராக திரு. ரவிச்சந்திரன் உள்ளார். இந்த மையத்தை நன்கொடையாய் அளித்த ஸ்ரீமதி. பிரபா சீதாபதிக்கும் மற்றுமுள்ள பொறுப்பாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.*

*சென்னையில் உள்ள மற்ற சத்சங்கக் குழுக்களான நங்கைநல்லூர், சூளைமேடு, மேற்கு மாம்பலம் போன்றவைகளின் சேவையும் அளவிடற்கரியது.*

***சத்சங்க அமைப்புகளின் முக்கியத்துவம்:***

*பகவானை ஒரு பௌதிக உருவிற்குள் அடக்க முடியாது என்பதை நாம் அனைவரும் அறிவோம். தான் எங்கும் பரவி நிற்கும் பரவஸ்து என்பதை அவரே அறுதியிட்டு கூறியுள்ளார். அவர் நம்மிடையே இன்றும் உயிரோட்டமாக நிலவி வருவதற்கு நாம் அனைவரும் சான்று பகர முடியும். இல்லையெனில் நாம் அனைவரும் இன்று இங்கே குழுமி இருக்க மாட்டோம். சென்னை நகரில் பயணம் செய்வதில் உள்ள சிரமங்கட்கும் குழப்பங்களுக்கும் இடைய பகவானது பெரும் கருணைக்கு உங்களது நன்றியினைத் தெரிவிக்க இங்குக் கூடியுள்ளீர்கள். நான் உட்பட, இங்குக் கூடியுள்ள பலரும் பௌதிக உருவில் பார்த்தேயிராத ஸத் குருவிற்கும் அவரது ஆஸ்ரமத்திற்கும் நம் நன்றியினைத் தெரிவிக்க நாம் கூடியுள்ளோம்.*

*சத்சங்கத்தின் தலையாய நோக்கம் பகவானது உயிரோட்டமான மெய்ம்மையை நம்மிடையே நிரந்தரமாக வைத்திருப்பதே. பகவான் தமது உபதேசங்களின் மூலம் உயிர் வாழ்கிறார். நமது கடமையாவது, பகவானின் உபதேசங்களின் மெய்ம்மையையும் தூய்மையையும் சற்றும் மாறுபடாது எதிர்காலத் தலைமுறைக்கு காத்து அளிப்பதே. இந்தக் கடமை நிறைவேற்றல், நாமே தீவிர சாதகர்களாக*

இருந்து, நம் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் பகவானின் உபதேசங்களைப் பயிற்சி செய்து உள்வயப்படுத்தினால் மட்டுமே சித்திக்கும். பகவானின் உபதேசங்களை உண்முகப்படுத்தும் பயிற்சியினை வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் பயின்று கொண்டேயிருக்க வேண்டும். அலுவலகத்திலோ, இல்லத்திலோ, நமது தினசரிக் கடமைகளைச் செயலாற்றும்போதோ இடைவிடாது 'நான் யார்?' என்ற விசாரணையைச் செய்து கொண்டே இருக்க வேண்டும். எப்போதும் வெளியே அலைந்து கொண்டு இருக்கும் எண்ணங்களை, நமது ஆதாரமாகிய 'நான்' என்பதற்குத் திரும்ப இடையறாது முயல வேண்டும்.

இதைச் சொல்வது எளிது; எனினும் செய்வது கடினம் என்பதை நாம் அறிவோம். பகவான் காட்டும் பாதைகளான ஆத்ம விசாரம் மற்றும் ஆத்ம சமர்ப்பணம் ஆகியவற்றை இடையறாது பின்பற்றுவதிலிருந்து இக்கால வாழ்வின் இடையூறுகள் தடைசெய்து வருகின்றன என்பதை நாம் அறிவோம். இந்த இடையூறுகளிலிருந்து விடுபட நமக்கு ரமண கேந்திரங்கள் மற்றும் சத்சங்கக் குழுமங்களின் இடையறாத தொடர்பு தேவைப்படுகின்றது. தீவிரமான ஆன்மிக ஈடுபாடு கொண்டு ஒன்றுகூடி அவரது பாடல்களைப் பாடும்போதும், அவரது உபதேச அருவியில் மூழ்கும்போதும் ஓர் அதிசய சக்தி வெளிப்பட்டு நம்மை அரவணைக்கிறது. பகவான் காட்டும் ஆன்மிகப் பாதையில் பயணிக்க அதே ஈடுபாடு கொண்டு ஸஹ்ருதயர்களின் துணை தேவைப்படுகிறது. இதையொட்டித்தான் எல்லா சமய நூல்களும், குருமார்களின் உபதேசங்களும், சத்சங்கத்தின் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றன.

வாழ்க்கை எனக்கு அளித்த பெருங்கொடை உங்களைப் போன்ற அற்புதமான பக்தர்களுடன் எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த ஆன்மிக இணைப்பே

*ஆகும். இந்தத் தொடர்பை இடையறாது கைக்கொண்டு ஒவ்வொருவரும் ஏனைய பக்தர்களுடன் அறுபடாத இணைப்பை உறுதி செய்யுங்கள். எல்லா கேந்திரங்களும் எல்லையற்று வளர்ந்து ஞானத் தீபங்களாய் பிரகாசிக்க வேண்டும் என்பதே எனது ஆழ்ந்த விருப்பமாகும். இதைச் செயல்படுத்த ஆஸ்ரமத்தின் இடையறாத ஆதரவும், பகவானின் அருளாசிகளும் உங்களுக்கு எப்போதுமே கிடைக்கும்.*

***இறுதியாக, ஆஸ்ரமத்தின் ஆத்மிகப் பாரம்பரியம்:***

*சென்னை பெருநகர் திருவண்ணாமலைக்கு அருகே இருப்பதால், உங்களில் பலர் ஆஸ்ரமத்தின் நூறாண்டுகால வரலாற்றினை ஆழமாக அறிந்திருப்பீர்கள். எனவே ஏனைய பிற இடங்களில் நிகழ்ந்த ஆஸ்ரம நூறாண்டு விழாக்களில் விவரித்தது போல ஆஸ்ரமத்தின் நூற்றாண்டு கால வளர்ச்சிச் சரித்திரத்தைக் குறித்து நான் பேசப் போவதில்லை. ஆஸ்ரமத்தின் மிகப் பெரும் பாரம்பரியச் சின்னம், பகவானின் உயிரோட்டமான முத்திரையை இடையறாது வெளிப்படுத்திக் கொண்டு இருப்பதே.*

*ஆஸ்ரமத்தின் நிர்வாகிகள் என்ற நிலையில் பகவானின் உயிர்த் துடிப்பான ஆன்மிக அதிர்வுகள் நம்மைச் சூழ்ந்துள்ளது என்பதை எப்போதும் உணர்ந்து பயனுறுகிறோம். இந்த ஆஸ்ரமத்தை நடத்துவதே பகவான்தான். நாம் அனைவரும் அவர் இயக்கும் வெறும் கருவிகளே என்பதை நாம் அறிவோம். அவரது அருட்சக்தியன்றி ஒரு புல்கூட அசையாது என்பதை நாம் அறிவோம். இது வெறும் மிகை உணர்ச்சி அல்ல. தினம் தினமுமே இதை நாம் செயல்பாட்டில் உணர்கிறோம்.*

*பகவானது தனிச் சிறப்பையும், மேன்மையும் குறித்து இங்கே சிறிது காண்போம். அவரது உபதேசங்கள் ஏன் நூறாண்டு காலம் கழிந்த பின்னரும் உயிர்த் துடிப்புடன் இயங்குகிறது மற்றும் ஏன் அது நிரந்தரமான ஆன்ம வழிகாட்டலாகத் திகழ்கிறது என்று அறிவோம்.*

ஆன்மிகத் தொடர்பான முரண்பாடுகளில் ஒன்று “எப்படி தன் உயிரைத் தியாகம் செய்பவன் அதை மீட்டெடுக்கிறான்” என்பதாம். எங்ஙனம் தன் தனித்துவத்தை ஒதுக்கி ஒப்படைப்பவன், ஏனையோர்களைக் காட்டிலும் தன் தனித்துவத்தை முழுமையாகப் பெறுகிறான் என்பது ஒரு புதிர். பகவான் தன்னை நாடி வருபவர் அனைவரிடமும் அன்புடனும், விநயத்துடனும் பழகுவார். எப்போதும் ஒரு மதபோதகரைப் போன்ற உயர் நிலையைத் தம் பேச்சிலோ, நடத்தையிலோ கொள்கையிலோ காட்டியதில்லை. அவரது சம்பாஷணையில் மிக்க உற்சாகமும், நகைச்சுவை நிரம்பியும் இருக்கும். அவரது திருமுகம் எப்போதும் தூய நீரின் பரப்பினைப் போல் இருக்கும் எப்போதும் மாறிக் கொண்டே இருக்கும் வெளிப்படலம் போல் இருப்பினும், அதேசமயம் மாறாத நிரந்தர நிலையிலும் இருக்கும். அவரது திருவிழிகளில் இருந்து வெளிப்படும், ஒப்பற்ற அன்பும், ஒளிரும் புரிதல் உணர்வும் வார்த்தைகளால் விவரிக்க இயலாதது. அவர் தமது பக்தர்களை எப்போதும் இயல்பான, மாறாத நிலையிலேயே இருக்க வேண்டும் என்று விரும்பினார். மனம்போன போக்கில் செயல்படுதலையும் மனப் பிறழ்வுடன் செயல்படுதலையும் என்றும் விரும்பியதில்லை. அவரது மனப்பாங்கு என்றும் மாறாதது. தன்னை நாடிவரும் அன்பர் தேவைக்கேற்ப அவரது விளக்கங்கள் இருக்கும். அவரை நாடிவந்த ஒவ்வொருவரும் அவரது சிறப்பான அருள் தமக்காகவே பெருகி வருகிறது என்று எண்ணினர்.

சிற்சில சமயங்களில் தன்னை நாடிவரும் அன்பர்களின் பிரச்சினைகளின் முக்கியத்துவத்தை வேண்டுமென்றே புறக்கணிப்பதுபோல் தோன்றும். அவரது புறக்கணிப்பில் ஓர் ஆழ்ந்த குறிக்கோள் அடங்கி இருக்கும். அவரது இறுதி நோக்கம் தமது அன்பர்களை பௌதிக வஸ்துக்கள் மற்றும் நிகழ்வுகளின்மேல் உள்ள பற்றுதல்களை விடுவிப்பதாகும். தமது சீடர்களே தமது

*ஐயங்களின் விடைகளைத் தமது இதயத்தில் தாமே நாடி அறிதலே சிறந்தது என்று பகவான் கருதினார்.*

*பகவான், நூல்களைக் கற்காமலேயே பரம ஞானத்தைத் தானே அடைந்தார். அதேசமயம் பண்டிதர்கள் தமது ஐயங்களுக்கு விடைதேடி அணுகும்போது அவர்களது சந்தேகங்களுக்கு விடை அளிப்பதற்காக பற்பல ஆன்மிக நூல்களையும் கற்றார்.*

*அவரே கருணையின் முழு வடிவம். அதேசமயம் அவரது திருமுகம் கல்லில் செதுக்கியதுபோல் அசைவற்றுக் காணப்படும். அவர் அன்பின் பேருருவம். அதேசமயம், பல வாரங்கட்கு தம்மை நாடிவந்த அன்பரை நோக்கி ஒற்றைப் பார்வையைக் கூடக் காட்டாமல் இருப்பார். பல சமயங்களில் ஒரு பக்தனை நேராக நோக்குவது அபூர்வமாகவே இருக்கும். அதேசமயம் ஒரு இடையறாத, எப்போதும் தணியாத அக்கறையுடன் அவரது ஆன்மிக வழிகாட்டல் தொடர்ந்து கொண்டே இருந்தது. இன்றும் தொடர்கின்றது.*

*பகவான் ஒரு புதிய சமயத்தினை ஸ்தாபிப்பதற்காக வரவில்லை அல்லது இப்போது இருக்கின்ற சமயத்தில் புது வழிகாட்டுவதற்கு வரவில்லை. அவர் செய்ததெல்லாம் ஆன்மிகப் பாதையில் ஆத்ம விசாரணை என்ற நேர்வழியைத் திறந்து வைத்ததுதான். இந்தப் பாதையைப் பின்பற்ற எந்தவிதமான சடங்குகளோ, வழிபாடு முறைகளோ, பூசாரிகளோ, வெளிப்படையான குறியீடுகளோ, கவனிப்புடன் அவதானிப்பதோ தேவையில்லை. இந்த ஆத்ம விசாரணையை அன்பர்கள் தமது தொழிற்சாலையிலோ, நகர அலுவலகங்களிலோ அல்லது சமையலறையிலோ, மடத்திலோ துறவாலயங்களிலோ எங்கு வேண்டுமானாலும் பின்பற்றலாம். நாம் இப்போது நோக்கும் நான் யார் என்பதை ஆழ்ந்த விசாரணையால் கண்டறிய வேண்டும் என்ற ஒன்றே இதன் தேவை. நாம்*

பின்னர் யார் ஆகப் போகிறோம் என்று கண்டறிவது, இதன் நோக்கமல்ல. இத்தகைய விசாரணை மூலம் கிடைக்கும் ஆன்ம எழுச்சியால், சாதகன் எப்போதும் நிரந்தரமான ‘நான்’ என்ற அதிர்வில் இருக்கின்றான். அறிவது என்பதே இருப்புணர்வுதான். உண்மையான குரு நமது இதயத்தில் உள்ளார் என்றும், நமது எண்ணத்தைத் தீவிரமாக இதயத்தை நோக்கித் திருப்பி இதயஸ்தானத்தை அடையும்போது அங்கே உள்ள குரு, ‘நான்’ என்பதை மிகச் சக்தியுடன் உள்நோக்கி இழுக்கிறார். நான் என்ற உணர்வு அப்போது இதயத்தில் முற்றிலும் கரைகிறது.

“ஈஸ்வரோ குருராத்மேதி” - கடவுள், குரு, ஆத்மா அனைத்தும் ஒன்றே என்பதை அவர் பலமுறை கூறியுள்ளார். வெளியே வீற்றிருக்கும் குரு மனத்தை உள்நோக்கித் தள்ளுகிறார். இதயத்தில் உள்ள குரு மனத்தை முற்றிலும் உள்நோக்கி இழுத்து இதயத்துடன் ஒன்றச் செய்கிறார்.

ஆஸ்ரம நிர்வாகத்தின் வேலை, ஆஸ்ரமத்தின் பொறுப்பான பராமரிப்பாளராகவும், பகவானின் உபதேசங்களைப் பரப்புபவராகவும் செயல்படுவதே. நிர்வாகத்தினை நடத்துதலையே தலையாய செயல்பாடாகக் கொண்டே பகவானுக்கும் பக்தர்களுக்கும் இடையே இணைப்புப் பாலமாகச் செயல்படாமல் இருத்தல்மூலம், நாம் எந்தவிதமான பாலின, ஜாதி, இனம், நாடு போன்ற வேறுபாடுகளின்றி செயல்படுதல் மூலம் எந்தவிதமான இடைப்பாலமும் இன்றி நேரடியாக பகவானின் உயிரோட்டமான பேரருளை அனைவரும் நேரடியாக உணர வகை செய்கிறோம். இதன் காரணமாகத்தான் ஆஸ்ரமத்தில் பகவானின் உபதேசத்தை எடுத்துரைக்க எந்தவொரு தனி ஆசிரியரும் இல்லை. ஆஸ்ரமத்திற்கு நிதி அளிப்பது குறித்த எந்த ஒரு முக்கியத்துவமும் எடுத்துரைக்கப்படுவதில்லை.

*பகவானின் உபதேசங்களை அவற்றின் பரிசுத்தமான தூய்மையுடன் பாதுகாத்து வைத்து, அவற்றை இந்திய மற்றும் உலக மொழிகளில் அச்சுப் பதிப்புகள் மற்றும் எண்மப் பதிவுகள் மூலமும் வையகமெங்கும் பரவச் செய்ய வேண்டும் என்பதே பகவானுக்கு எமது அர்ப்பணிப்பு. எமது பதிப்பகக் குழு மூலமாகச் சமூக வலைதளத்தின் சக்தியை ஊக்கத்திறனாகப் பயன்படுத்தி உலகெங்கிலும் உள்ள சாதகர்கட்கு பகவானின் வழிகாட்டுதல், எண்மத் துறையினைப் பயன்படுத்துதல் மூலம் பயன்பெறல் செய்கிறோம்.*

*பகவானின் இந்த அற்புத ஞான மரபை வருகின்ற நூறாண்டுகள், ஏன், காலத்தின் எல்லைவரை பாதுகாத்து வைக்க நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்.*

*எனது இந்தச் சொற்பொழிவை, சென்னை ரமண கேந்திரத்தின் ஸ்தாபகர் பி. அனந்த ஸ்வாமிக்கு காஞ்சி பரமாச்சாரியார் அருளிய அறிவுரையுடன் முடித்துக் கொள்கிறேன்.*

*அனந்த ஸ்வாமி கூறுகிறார், "நான் எப்போது பரமாச்சாரியரிடம் செல்லும் போதெல்லாம், அவர் கேட்பதெல்லாம், நீ பல்லாண்டுகளாய் ரமண கேந்திரத்தை நடத்திக் கொண்டு உள்ளாய். உங்களது வாராந்திர சத்சங்கங்கட்கு எவ்வளவு பேர் வருகின்றனர்." நான், ஆழ்மனதில் சிறிது தயக்கத்துடன் "பிரசித்திபெற்ற பேச்சாளர் யாரேனும் வந்தாலன்றி முப்பது அல்லது நாற்பது பேர்கள்தான் வருகின்றனர்" என்று விடையளிப்பேன். அதற்கு மஹாஸ்வாமி, "வேதகாலத்தில் சாஸ்திரங்களும், உபநிஷதங்களும் ரிஷிகளால் போதிக்கப்பெறும் போது எவ்வளவு சிஷ்யர்கள் இருந்தார்கள் என்று உனக்குத் தெரியுமா? வெறும் ஐந்து அல்லது ஆறு சீடர்கள்தான் வருவார்கள். வேதகாலத்திலேயே இதுதான் நிலை," என்பார் பரமாச்சார்யர்.*

*விவேக சூடாமணியில் சங்கரர் கூறுகிறார்: "ஆத்ம சாக்ஷாத்காரத்திற்கு அடிப்படைத் தேவைகள் மூன்று: அவற்றை நாம் இறைவனின் பெருங்கருணை மூலமே அடைய முடியும். மனிதப் பிறப்பு, தீவிரமான ஆன்மிக தாகம் (முமுட்சுத்துவம்) மற்றும் ஞானிகளுடன் இடையறாத தொடர்பு." பகவான், விவேக சூடாமணியைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். நாம் இப்போது பெரும் பரிசைப் பெற்றுள்ளோம். சங்கரர் கூறும் இந்த மூன்று தேவைகளையும் நாம் முழுமையாகப் பெற்றுள்ளோம். நமக்குக் கிடைத்தற்கரிய மனிதப் பிறவி வாய்த்துள்ளது. ஆன்ம விடுதலை என்ற முமுட்சுத்வம் நமக்குள்ளே இடையறாது எழும்புகிறது. இத்தனைக்கும் மேலாக, பகவான் எனும் மஹா குருவின் வழிகாட்டல் நமக்குக் கிட்டியுள்ளது. வேறு என்னதான் தேவை நமக்கு?*

*இறுதியாக, இசைஞானி இளையராஜாவை அறிமுகப்படுத்தும் பேறு எனக்குக் கிடைத்துள்ளது.*

*1980 ஆம் ஆண்டிலிருந்தே இளையராஜா அண்ணா நம்முள் ஒருவராவார். அவர் மும்முரமாக இசையுலகில் செயலாற்றி வந்த நாட்களில்கூட, பௌர்ணமி நாளன்று தனது இடையறாத திரையுலக செயல்பாட்டிலிருந்து ஒருநாள் விடைபெற்று ஆஸ்ரமத்திற்கு வந்து, கிரிவலமும் செய்வார். பகவான்மீது அவர் கொண்டுள்ள மாறாத பக்தி மற்றைய பக்தருக்கு எல்லாம் கலங்கரை விளக்கமாய்த் திகழ்கிறது.*

*அவர் வாக்கில் வெளிவந்த முதல்பாடல், இவ்வரிகளைக் கொண்டு இருப்பதில் ஆச்சரியமில்லை.*

*அப்பாடலாவது:*

*"இதயம் ஒரு கோயில்*
***நீயும் நானும் ஒன்றுதான் எங்கே பிரிவது..."***

*பகவானின் பேரருளை அவர் சிறப்பாக விவரிக்கிறார்: “உலகில் தோன்றிய மகான்கள் அத்தனைபேரும் மக்களுக்கு அறிவுரையும் போதனைகளையும் வழங்கினார்களே தவிர உள்ளதை உள்ளபடி எளிமையாக எடுத்துச் சொல்லி அவர்களுக்கு வழிமுறை காட்டியது உண்மையான வழியைக் காட்டியது பகவான் ஒருவர் மட்டுமே ஆவார்.”*

*மரணானுபவத்தை அவர் எழிலுறச் சித்தரிக்கிறார்:*

***“மரணத்தை வரவழைத்(து) அணைத்தானை***
***மானுடன் எனத்தகுமோ?”***

*திருக் திருசிய விவேகத்தை இசைஞானி எழிலுற விளக்குகிறார்:*

***“கருத்தினில் இருத்தி கருதிக் கருதிட கருத்தழிப்பான்!***
***கருத்தழிந்தே போனால் காண்பொருளும் ஏது?***
***காண்பானும் தான் ஏது?***
***காண்பொருளும் காண்பானும் அவனாகும் மெய்தன்னை***
***அறிவுவிழி திறந்து அதன்மூலம் கண்டாலும்***
***காணக் கிடைக்காத...”***

*பகவானின் உபதேசங்களை அவர் அனாயாசமாக தமிழ்ப் பாவில் கொணர்கிறார். சிறிய, ஆழம் பொதிந்த சொற்களாக அவர் மிக உயர்ந்த தத்துவங்களை சாமானிய மனிதருக்கு எளிதாகக் கொணர்ந்து அளிக்கிறார். பகவானைப் புகழ்ந்து அவர் பாடியுள்ள பாடல்கள் நெஞ்சை உருக்குபவை.*

*“என் இசை, என் அன்னை மூகாம்பிகை, என் பிறவிப்பிணி ஒழித்த பகவான் ஸ்ரீ ரமணர் அருள் இதையெல்லாம் அடைந்ததை மட்டுமே முக்கியமாக கருதுகிறேன். திருவண்ணாமலை என்ற ஒரு ஸ்தலம் இல்லாது போயிருந்தால் என் கதி என்னவாகியிருக்கும்? அதைச் சுற்றிச் சுற்றி இந்த உடம்பைத் தேய்ப்பதைத் தவிர எனக்கு ஏதும் உயர்வாகத் தோன்றவில்லை.” என்கிறார் இளையராஜா.*

ஒவ்வொரு துறையிலும் மிகச் சிறந்த மேதைகள் ஏராளமான படைப்புகளை உருவாக்குகின்றனர். ஆயினும் அவைகளில் பல, விற்பன்னர்கள் மற்றும் ரசிகர்களால் சிறந்ததாகக் கருதப்படாமல் ஒதுக்கப்படுவதைக் காண்கிறோம்.

லண்டன் ஃபில் ஹார்மோனிக் சங்கீதக் குழு ஐரோப்பிய சாஸ்திரிய சங்கீதத்தின் ஒரு மிகச் சிறந்த சாஸ்திரிய சங்கீதப் படைப்புகளைத் தேர்ந்து எடுத்தபோது அவற்றுள் மோஸார்ட்டின் ஆறு படைப்புகளும், பீதோவனின் ஐந்து படைப்புகளும் மற்றும் பாக்கின் மூன்று படைப்புகளை மட்டுமே உள்ளடக்கி இருந்தன.

தலைசிறந்த சங்கீத படைப்புகளை உருவாக்க மோஸார்ட் 600 படைப்புகளையும் பீதோவன் 650 படைப்புகளையும், பாக் 1000 க்கு மேற்பட்ட படைப்புகளையும் உருவாக்க வேண்டி வந்தது.

பிக்காஸோ உருவாக்கிய 1800 கலைப் படைப்புகளினும் 12000 சித்திரங்களிலும் மிகச் சிறிய எண்ணிக்கையே உலகப்புகழ் பெற்றன.

நமது இசைஞானியின் ஒப்புயர்வற்ற சங்கீதப் படைப்புகள், மேற்குறிப்பிட்ட இசை மற்றும் கலை மேதைகளின் படைப்புகளைக் காட்டிலும் பன்மடங்கு உயர்வாகக் கருதப்படுகின்றன. மேதைகள் அனைவரிலும் அவர் உயர்ந்த மேதை. அவர் இன்று நம்மிடையே வந்து அமர்ந்திருப்பது நம் அனைவருக்கும் பெருமை தருவதாகும்.

இவர் பெற்றுள்ள அத்தனை பெருமை மிக்க விருதுகளிலும் மிக உயர்வாக அவர் கருதுவது, பகவானைக் கண்டறிந்து, அவர் பேரருளுக்குப் பாத்திரமானதே என்பதாம்.

அனைவருக்கும் எனது வாழ்த்துகள்.

# ஔவைக் குறள்

## விளக்கம்: ராம் மோஹன்

### 26. சிவயோக நிலை

*குறள் 251: அடிமிசை வாயு வடுத்தடுத் தேகி*
*முடிமிசை யோடி முயல்.*

*பொருள்: மூலாதார சக்ரத்தின் அடியில் உண்டாகும் அபான வாயுவை, இறைவன் திருவடியில் சமர்ப்பித்து பின்னர் பிரணவமாகிய உச்சியில் செலுத்திவிடு.*

*விளக்கம்: ஞான வாசிட்ட நூலில் புசுண்டன் கதையில் இந்தப் பாடலின் விளக்கம் தெளிவு படுகிறது.*

*ஆடுகின்ற பிராணலயத்தருகு மேவிம்*
*பானலயத் தருகுற் றுப்பிராணாபான,*
*னூடுபயில் சிற்பரத்தை யேத்துகின்றே*
*னுற்றவபானன் றேற்றமொழிந்து நிற்க*

*சரீரத்தின் கூடவே தொடர்புற்று சுழுமுனை ஸ்தானத்தில் செலுத்துவதற்கு முயல வேண்டும் என்பது உட்பொருளாம்.*

*குறள் 252: உண்ணாடி வாயு வதனையுட னிறப்பி*
*விண்ணோடு மெள்ள விடு.*

*பொருள்: சந்திர கலை சம்பந்தமான அபானனின் லக்ஷணங்களை அறிந்து கொண்டு, நாபியில் உட்சென்று சிதாகாசத்தில் கலக்கும்படி விடு.*

*விளக்கம்: பிராணன் என்பது நாம் உள்ளே எடுக்கும் உயிர் சக்தியைக் குறிக்கின்றது. அபானன் என்பது கீழ்நோக்கிச் செலுத்தப்பட்டு வெளியேற்றப்படும் நச்சுப் பொருள் கலந்த வாயுவைக் குறிக்கின்றது.*

*பிராணன் என்பது ராஜயோகத்தில் சூரிய கலையையும், அபானன் என்பது சந்திர கலையையும் குறிக்கின்றது. பூரகம், கும்பகம், ரேசகம் என்ற மூன்று பிராணாயாம நிலைகளில், முதலில் மூச்சை வெளியிடும் ரேசக தந்திரத்தைக் கூறி, பின் மூச்சை உள்ளிழுக்கும் பூரக தந்திரத்தைக் கூறுகிறார்.*

*ஞான வாசிட்டத்தில் முனிவர் இதை விளக்குகிறார்.*

*குண்டலினி யெனுஞ்சீவ சத்திமிக நல்லதாய்க் கூடிநிற்கு*
*மண்டு பிராணபான வடிவமா தலிற்கீழ்மேல் வந்துபோகு*
*மிண்டறமேற் போகிலுமெல்லா மாய்ப்போமீ*
*ளினுமெல்லாமாய்மீ*
*தண்டலிலாப்புமா னாகிச்சாமேவும் பிராணனுமச்*
*சத்திதானே*
*- (சிகித்துவசன்கதை, 37)*

*சுருங்கக் கூறின், இப்பாடல் குண்டலினி எனப்படும் சிவசக்தி, தூய நிலையில் பிராணனாய், பிராணன், அபானன் என மேலும் கீழும் இயங்கும். மேலும் கீழும் இயங்குகின்ற இதனையே பிராண சக்தி என்று கூறுகிறோம்.*

*குறள் 253: மெள்ள விரேசித்து மெய்விம்மிப் பூரித்துக்*
*கொள்ளுமின் கும்பங் குறித்து.*

*பொருள்: முன் பாடலில் பூரகம் (உள் செல்லும் வாயு) ரேசகம் (வெளிச் செல்லும் பிராணன்) பற்றிக் கூறிய ஔவையார், இக் குறளில் மென்மையாக அபாணனைப் பிராணனோடு பொருந்த வைத்து அந்நிலையில் உடல் ஸ்பந்தனம் என்னும் விதிர்விதிர்ப்பு நிலையடைந்து, கலைகள் விரிவடைந்து மேல் நோக்கும் நிலையை அடையும்போது கும்பக நிலை கைகூடும் என்று விளக்குகிறார்.*

*இந்த ஸ்பந்தனம் எனப்படும் விதிர்விதிர்ப்பு யோகநிலையை மணிவாசகரும் விவரிக்கின்றார்.*

*மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன் விரை ஆர் சுழற்கு என்*
*கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்*
*பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சய சய போற்றி என்னும்*
*கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே.*

*பொருள்: இறைவா! மனம் நிறைந்து நின் திருவடிகளை நாடும்போது என் உடல் புளகாங்கிதம் அடைகின்றது. உணர்வாகிப் பெருக்கால் என் தேகம் நடுங்குகின்றது. என் கைகளை தலைமேல் வைத்து உன்னை வணங்குகிறேன். கண்ணீர் ஆறாய்ப் பெருகுகிறது. உள்ளத்தில் இளஞ்சூடு பிறக்கிறது. இந்த உள்ளமே பெருங்கோயில் ஆனதால் என்னை இதுகாறும் ஆக்ரமித்து இருந்த உலகப் பற்றுக்கள் பிரிந்து ஓடுகின்றன. உன் திருவருட் பெருக்கு மேலும் மேலும் பரவ உன்னை வணங்குகிறேன். உன்னை நாடி இருக்கும் ஒன்று மட்டுமே நான் பின்பற்றும் நெறி. நான் உன் உடைமை; நீ என் தலைவன். நான் அடைந்துள்ள ஆன்மிக நிலை எத்தகையது என்பதை நீயே அறிவாய். உன்னையே நான் விடாது பின்பற்றுவேன். என் நிலையை நீ அறிவாய் அன்றோ!*

*குறள் 254: இரேசக முப்பத் திரண்டது மாத்திரை*
*பூரகம் பத்தாறு புகும்.*

*விளக்கம்: பிராணனை வெளியே விடும் ரேசகம் முப்பத்து இரண்டு மாத்திரை அளவிற்கு பயில வேண்டும்.*

*மாத்திரை என்பதன் விளக்கம்*

*“கண்ணிமைப் பொது கை நொடிப் பொழுதும் மாத்திரைக்கு அளவாம்.”*

*- நன்னூல், பவநந்தி முனிவர்.*

*குறள் 255: கும்பக நாலோ டறுபது மாத்திரை*
*தம்பித் திடுவது தான்.*

*பொருள்: கும்பகம் எனப்படும் பிராணனை உள்ளடக்கும் பயிற்சி, நாபியில் அறுபது மாத்திரை அளவு பிராணன் மற்றும் அபாணனை அசைவற்ற நிலையில் நிறுத்துவதே.*

*குறள் 256: முன்ன மிரேசி முயலுபின் பூரகம்*
*பின்னது கும்பம் பிடி.*

*பொருள்: முறையாய் பிராணாயாமம் செய்யும் வழியானது. ரேசகத்தில் முதலில் தொடங்கி அதைத் தொடர்ந்து பூரகத்தை செய்து இறுதியில் கும்பகத்தில் நிறைவு செய்வதாம்.*

*குறள் 257: ஈரைந் தெழுபத்தீ ராயிர நாடியுஞ்*
*சேருமின் வாயுச் செயல்.*

*பொருள்: இருவாயுக்களான பிராணன் அபானன் தன் வினையால் பஞ்சேஞ்திரியங்களையும் எழுபத்து இரண்டாயிரம் நாடி நரம்புகளையும் ஒன்றாக்கிடும்.*

*குறள் 258: வாசலீ ரைந்து மயங்கிய வாயுவை*
*ஈசன்றன் வாசலி லேற்று.*

*பொருள்: இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு நாசித் துவாரங்கள் வாய் ஒன்று ஆகிய ஏழு வாசல்கள் வழியாய் இதயத்தில் நுழைய மாட்டாமல் திணறும் வாயுவை, சிவனுடைய வழியாகிய பிரம்மரந்திரமாகிய துளை வழியாக செலுத்தி நுழைவாய்.*

*இந்தக் கருத்தை அழகிய எடுத்துக்காட்டின் மூலம் திருமூலர் விளக்குகிறார்.*

*ஆரிய னல்லன் குதிரை இரண்டுள*
*வீசிப் பிடிக்கும் விரகறி வாரில்லை*
*கூரிய நாதன் குருவின் அருள்பெற்றால்*
*வாரிப் பிடிக்க வசப்படுந் தானே. (திருமந்திரம் 565)*

*விளக்கம்: மனம் என்னும் ஆரியன் மிக நல்லவன். அவனிடம் ஓடுகின்ற பிராணன், அபானன் என்ற இரண்டு*

குதிரைகள் உள்ளன. அவற்றை வெளியே விட்டு மீண்டும் உள்ளே நிறுத்துகின்ற திறமை உடையவர் இல்லை. பிராணனை, ஆத்ம ஜயம் பெற்ற குருநாதன் அருள் கிட்டினால் பிராணன் அபானன் ஆகிய குதிரைகளை சேர்த்துப் பிடிக்க பிராணன் ஆத்ம ஜயம் பெற்றிடும்.

மீண்டும் இந்த உவமானத்தை திருமூலர் பயன் படுத்துகிறார்.

மேல்கீழ் நடுப்பக்க மிக்குறப் பூரித்துப்
பாலாம் இரேசகத் தானுட் பதிவித்து
மாலாகி யுந்தியுட் கும்பித்து வாங்கவே
ஆலாலம் உண்டானின் அருள்பெற லாமே.

- (திருமந்திரம் 572)

விளக்கம்: காற்று, தொண்டை, மூலாதாரம் விலா ஆகியவற்றில் நிரப்பும் வண்ணம் செய்து, வெளி மூச்சு வெளிப்படும் ரேசகத்தினால் உறுப்புகள் ஒன்றுடன் ஒன்று பதியும்படி செய்து, வயிற்றின் உள்ளே மூச்சு கும்பகத்தில் அடங்கும்படி செய்தால் ஆலம் உண்ட சிவபிரானின் அருள் பெற முடியும்.

பத்து வழிகளில் சஞ்சரிக்கும் பிராண வாயுவை சுழுமுனை நாடிச் செலுத்துவாய் என்பதும் இதன் பொருளாம்.

குறள் 259: தயாவினில் வாயு வலத்தி லியங்கில்
தியான சமாதிகள் செய்.

பொருள்: அருள் பிரவகிக்கும் நாபிக் கமலத்தில் இருந்து எழும் பிராண அபான வாயுக்கள் பிங்கலையில் பாயும்போது தாரணை, தியான, சமாதிகளைச் செய்வாய்.

விளக்கம்: இப்பாடலுக்கு திருமந்திரம் மூலம் விளக்கம் காணலாம்.

நடுவுநில் லாமல் இடம்வலம் ஓடி
அடுகின்ற வாயுவை அந்தணன்கூடி

*இடுகின்ற வாறுசென் றின்பணி சேர*
*முடிகின்ற தீபத்தின் முன்னுண்டென் றானே.*

*- (திருமந்திரம் 795)*

*பொருள்: சுழுமுனையில் நில்லாமல் இடம் வலம் ஓடுகின்ற பிராணனைப் பொருத்தி புருவ மத்தியில் இனிமை தரும் குண்டலினியைப் சேரும்படி செய்தால் நடு நாடியின் உச்சியில் தீப ஜோதி தோன்றும்.*

*பிராணனின் ஓட்டம் ‘சரம்’ எனப்படுகிறது. அது வெள்ளி, திங்கட்கிழமைகளில் இடது மூக்கு வழியாகச் செல்ல வேண்டும். சனி, ஞாயிறு, செவ்வாய்க்கிழமைகளில் வலது மூக்கு வழியாகவும், வியாழக் ிகிழமையில் வளர்பிறையில், இட மூக்கு, தேய் பிறையில் வல மூக்கு வழியாகவும் ஓடுதல் வேண்டும்.*

*திங்கள் ஞாயிறு கிழமைகளில் உயிர் ஓட்டம் நடக்க வேண்டும். முறைக்கு மாறாக நடந்தும், ஏறி இறங்கும்போது செய்தால் இடர் விளையும்.*

*குறள் 260: ஆதியா மூலமறிந் தஞ்செழுத் தினைப்*
*போதியா தோது பிணை.*

*பொருள்: யோக சாதனைக்கு மூலமாக உள்ளது நாபிக் கமலம். அதில் கருத்தைச் செலுத்தி, பஞ்சேஞ்திரிய சக்திகளை ஒன்றாகச் சேர்த்து விடு.*

*பிரணவத்தோடு பஞ்சேஞ்திரிய சக்திகளை சேர்ப்பதே “ஓம் நமசிவாய” என்னும் மந்திர உபதேசத்தின் கரு.*

*“போதியாது ஓது” என்பது பிறர் அறியாவண்ணம் சுத்த மௌனத்தில் தியானிப்பதைக் குறிக்கிறது.*

# அணிலும் அனுமனும்

**D. தியாகராஜன்**

*சாதாரண மானிடப் பிறப்பெடுத்து, இறைவன் மீது அன்பர்களாகி, கடவுளையடைந்து அருளாளர்களாய் உயர்ந்த எண்ணற்ற பெரியோர்கள் பலவிதமான மார்க்கத்தில் பக்தி செய்து, இறைவனை தொழுது தமது நிலையை உயர்த்திக் கொண்டுள்ளனர் என்பதற்கு நமது இதிகாசங்களிலும் புராணங்களிலும் எண்ணற்ற சான்றுகளைக் காணலாம்.*

*சிரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாதசேவனம், வந்தனம், தாஸ்யம், சக்யம், ஆத்ம நிவேதனம் என பக்தியின் வகைகள் பலவிதமாயிருந்தாலும் தன்னலமற்று, பலனை எதிர்நோக்காது, தியாக மனப்பான்மையுடன் இறைவனை சரணடைந்து செய்யப்படும் சேவைக்கு இறைவனின் அருள் எப்போதும் கிடைத்தே வந்துள்ளது.*

*ஸ்ரீ ராமபிரானுக்கு அனைத்து ஜீவராசிகளும் தங்களால் இயன்ற சிற்சிறு கைங்கர்யங்களை செய்துள்ளதை நாம் இராமாயணம் வாயிலாக அறிந்துள்ளோம்.*

*கடலைத் தாண்டவும், சஞ்சீவி மலையைத் தூக்கி வரவும் அநாயாசமாக செய்து முடித்த அதீத பலம் கொண்ட அனுமனையும் தன் சிறிய உருவத்தைக் கொண்டு ஒரு துகள் மணலை சேது பாலம் அமைக்க கொண்டு வந்து உதவிய அணிலையும் எவ்வித சேவையாயினும் அது பெரிது, சிறிது என்ற பாகுபாடு இல்லாமல் அனைத்தையும் சமமாகவே பாவித்து அருளினார் ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி.*

*சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்*
*பொற்றாமரையடியே போற்றும் பொருள்கேளாய்!*
*பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து நீ*
*குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது... ...*

*- (திருப்பாவை 29)*

*பொருள்: கண்ணா! அதிகாலையில் உன் பொன்போன்ற தாமரை பாதங்களை வணங்க வந்திருக்கிறோம். அதற்கான காரணத்தைக் கேள்! பசுக்களை மேய்த்துப் பிழைக்கும் ஆயர்குலத்தில் பிறந்த நீ, எங்களது இந்த சிறு விரதத்தைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடாதே! நீ தரும் சிறு பொருட்களுக்காக இந்த விரதத்தை மேற்கொள்ளவில்லை. என்றும், ஏழுபிறவிகளிலும் நீ எங்கள் குலத்தில் பிறக்க வேண்டும். எங்களை உன் உறவினர்களாக ஏற்க வேண்டும். உனக்கு மட்டுமே சேவை செய்யும் பாக்கியத்தை தரவேண்டும். இது தவிர மற்ற விருப்பங்களை எல்லாம் நீயே அழித்து விடு என்று ஆயர் குல பெண்கள் கூறுவதைப்போல பாடுகிறாள் ஆண்டாள்.*

*தாஸ்ய பக்தி இறைவன் அல்லது குருவின் மகிமை, இயல்பு மற்றும் நற்பண்புகளை உணர்ந்து அடிமையாக, தாசனாக பாவித்து அவர்களுக்கு சேவை செய்வதாகும். சேவித்தல், ஆலயங்களை சுத்தம் செய்தல், அவர்களின் அடியார்களுக்கு சேவை செய்தல் போன்றவை இதில் அடங்கும். தன் சுயத்தை முழுமையாக இழக்கும் அனன்ய பக்தியே, முழு சரணாகதியே, தாஸ்ய பக்தி. தாசன் எதையும் இழப்பதில்லை, மாறாக குருவின் சேவையின் மூலம் அவன் அவரது உள்ளார்ந்த அம்சத்தில் அனைத்தையும் அடைகிறான்.*

*அனன்யாஸ் சிந்தயந்தோ மாம் யே ஜனா: பர்யுபாஸதே*
*தேஷாம் நித்யாபி யுக்தானாம் யோகக்ஷேமம் வஹாம் யஹம்*

*'அனன்ய பக்தியுடன் என்னை வழிபடுபவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து, காத்து அருள் பாலிக்கின்றேன்.' என்று கீதையும் உபதேசிக்கின்றது.*

திருநாவுக்கரசரும் பல்வேறு சிவாலயங்களுக்குச் சென்று தேவாரப் பதிகங்களைப் பாடியதோடு மட்டுமல்லாமல் 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று அவ்வாலயங்களைத் தூய்மை செய்யும் உழவாரப் பணியையும் மேற்கொண்டார். சிவாலய உழவாரப் பணி செய்து இறைவனைத் தொண்டு வழியில் வழிபட்டு முன்மாதிரியாக விளங்கிய இவரை "உழவாரத் தொண்டர்" என்று அழைத்து, இன்றும் உழவாரப் பணியின் தலைவராக நாவுக்கரசரையே கொள்கின்றனர்.

குகை நமச்சிவாயர் அருணாசலனிடம் முழுமையாக தன்னை அடிமையாக ஒப்புவித்து இவ்வாறு பாடியுள்ளார்.

*விற்கலாம் கொண்டுபோய் வேண்டுமிடத் தேஒத்தி*
*வைக்கலாம் தானம் வழங்கலாம் இக்கணமே*
*நான்தான் உனக்கடிமை நம்பாமல் நீஇருப்பது*
*ஏன்தான் அருணேச னே.*

- (22, அருணகிரி மாலை,
குகை நமச்சிவாயர் வெண்பாத் திரட்டு)

பகவான் ரமண மகரிஷிகளும் தமது ஞானத் தந்தையாம் அருணேசரிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்து இவ்வாறு உருகுகிறார்.

*அண்ணா மலையா யடியேனை*
*யாண்ட வன்றே யாவியுடற்*
*கொண்டா யெனக்கோர் குறையுண்டோ*
*குறையும் குணமு நீயல்லா*
*லெண்ணே னிவற்றை யென்னுயிரே*
*யெண்ண மெதுவோ வதுசெய்வாய்*
*கண்ணே யுன்றன் கழலிணையிற்*
*காதற் பெருக்கே தருவாயே*

- (பாடல் 7, அருணாசல நவமணிமலை)

"அடியவனாகிய என்னை என்று நீ ஆட்கொண்டாயோ, அன்றே எனது உயிரையும் உடலையும் அடிமையாக்கிக் கொண்டாய். எனக்கு

இனி ஒரு குறையும் இருக்க முடியுமோ, உன்னையன்றி குணங்களையும் குறைகளையும் சிந்திக்க மாட்டேன். என் உயிருக்கும் உயிரே! உனக்குப் பிரியமானது எதுவோ அதையே நீ எனக்கு செய்தருள்வாய். கண்ணுக்கும் கண்ணான தெய்வமே! உனது திருவடித் தாமரைகளில் பக்திப் பெருக்கைத் தந்து அருள்வாயாக."

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் சந்நிதியிலும் பெரும்பண்டிதர்கள் முதல் எளிமையான மனிதர்கள் வரை எண்ணற்ற அன்பர்கள் தாங்கள் ஏதாகிலும் ஒரு சிறு சேவையை பகவானுக்கு செய்ய வேண்டும் என்ற ஆவலில் பகவானுக்கு கைங்கர்யம் புரிந்து வந்தனர்; வந்து கொண்டும் உள்ளனர்.

முருகனார் தமது 'புனர்வசு வண்ணப்' பாடலில் அன்பர்கள் எவ்வாறு பகவானுக்கு கைங்கர்யம் செய்ய விழைகின்றனர் என்று இவ்வாறு வருணித்துள்ளார்:

"ஏதாகிலும் ஓர் குற்றேவல் இயற்றப் பெறாமோஎன்று
அதே நினைவாவர் புனர்வசு நன்னாள் அதுவண்ணம்.."

அவனுடைய பிறந்தநாளை அன்பர்கள் எப்படியெல்லாம் கொண்டாடுவார்கள்? விதானம் கட்டி, தொங்கல் விட்டு மேலும் பற்பல அலங்காரங்களும் செய்வர். ஏதாகிலும் ஒரு குற்றேவல் (சிறிய காரியமாவது) செய்ய மாட்டோமா என்று அதே நினைவாகவே சிலர் இருப்பார்களாம். மாதவர் வேதியர் மந்திரம் ஓதி வாழ்த்துவார்கள், ஏதும் அறியாத அன்பர்களும் அவனருளால் அன்று மேதையராக மாறி அவன் பெருமையைப் பேசுவார்களாம். தாழிசை வண்ணம் சிலர் பாடுவார்கள், வீணை மற்றும் சில இசைக்கருவிகளும் அன்று வாசிப்பார்கள். பெண்கள் அன்று பல பொடிகளால் வண்ணக்கோலம் இடுவார்கள். இதுவே அவனுடைய புனர்வசு நன்னாளது வண்ணம்.

கணபதி முனிவர், முருகனார் மற்றும் ஜி.வி. சுப்பராமய்யா போன்றோர் தங்கள் மொழிப் புலமையை

*பகவான் ரமணரின்மேல் பாக்களாக சமஸ்கிருதம், தமிழ் மற்றும் தெலுங்கில் இயற்றித் தங்களின் பக்தியை காணிக்கையாக்கினார்கள்.*

*கந்தன், அண்ணாமலை சுவாமி போன்றோர் தங்களது கடின உழைப்பின் வாயிலாக பகவானுக்கும் அன்பர்களுக்கும் பயன்படும்வண்ணம் பாதையை செப்பனிடுதல், கட்டிடம் கட்டுதல் போன்ற பணியினைச் செய்தார்கள்.*

*அரசர்கள், பணக்காரர்கள் பெரிய அரிய பரிசுப் பொருட்களையும் பகவானுக்குக் காணிக்கை யாக்கினார்கள். விலையுயர்ந்த பொருட்களையும், தின்பண்டங்களையும் பிறருக்கு அளித்து, தோசை பாட்டி, கீரைப்பாட்டி, குப்பன் போன்ற எளிய கிராமத்து மனிதர்கள் கொண்டு வந்து கொடுத்த கூழையோ, ராகி தோசையையோ அன்புடன் ஏற்றுக் கொண்டார் பகவான். சரியாகக்கூட வார்க்கப்படாத அந்தத் தோசைகளையும் பகவான் மிகவும் ருசித்து அமிர்தம்போல் சாப்பிட்டார்.*

*மேற்படி யாவரும் பிரதிபலனாக சம்பளமோ, வேறு எந்த உதவியோ எதிர்பாராமல் பகவானுக்கு சேவை செய்வதை பாக்கியமாகக் கருதி செய்து வந்த தன்னலமற்ற புண்ணியசாலிகள்.*

*பகவான் ரமண மகரிஷிகள் அருணாசலம் வந்தபிறகு அவருக்கு எண்ணற்ற அன்பர்கள் சேவை செய்து வந்தனர். அவர்களுள் பழனிசாமி முதன்மையானவர்.*

*ராமநாத பிரம்மச்சாரி பலகீனமான உடலைக் கொண்டு அசாத்திய பணிகளை செய்து ஆச்சரியத்தில் ஆழ்த்துபவர். பகவான் கீழே வந்து ரமணாச்ரமத்தில் வசிக்கத் துவங்கிய பிறகு ராமனாத பிரம்மச்சாரியும் தன்னுடைய சேவையைத் தொடர்ந்தார். யாரும் சொல்லாமல் தானே ஆச்ரமத்தைப் பெருக்கிச் சுத்தம்*

*செய்து அங்கே வரும் அன்பர்களின் தேவைகளைக் கவனித்துக் கொள்வார்.*

*இரவு ரயிலில் யாராவது வந்தால் அவர்களுக்கு அன்போடு உணவிட்டு படுப்பதற்கு ஓலைப்பாயும் தலையணையாக ஒரு சிறு கட்டையையும் அவர்களுக்குக் கொடுப்பார். தூக்கத்தில்கூட திடீரென்று யாராவது தண்ணீர் கேட்டால் உடனே எழுந்து இதோ! என்று ஓடிச் சென்று தண்ணீர் கொண்டு வருவார்.*

*குஞ்சு சுவாமி, அகிலாண்டம்மாள், மஸ்தான்சாமி என எண்ணற்ற அன்பர்கள் பகவானுக்கு தொண்டாற்றியுள்ளார்கள். பேருந்து வசதிகள் சரியாக இல்லாத அந்நாட்களில் தேசூரிலிருந்து 'தேசூரம்மா' எனும் அகிலாண்டமாளும் மஸ்தானும் பகவானை தரிசிக்க வருவர். வரும்பொழுது பகவானுக்கு பிக்ஷை பாலிப்பதற்காக மளிகைப் பொருட்கள், பாத்திரங்கள் அடங்கிய மூட்டைகளை மஸ்தான் சுமந்து வருவார். இந்த குருசேவையை பெருமையாகக் கருதி செய்து வந்தனர்.*

*தனியாளாக எவருடைய உதவியும் இன்றி கந்தசாமி மேற்கொண்ட முயற்சியின் பலன்தான் நாம் பார்க்கும் இன்றைய கந்தாச்ரமம். அந்த இடம் முன்னர் எப்படி இருந்தது என்று நம்மால் கற்பனைகூட செய்து பார்க்க முடியாது. கந்தசாமி அசாதாரண முயற்சியோடு தன்னுடைய கைகளாலேயே இதையெல்லாம் செய்தார். நான்கு ஆட்களால்கூட செய்ய முடியாத வேலையை அவர் தனியொருவராக நின்று செய்து முடித்தார்.*

*இன்று நாம் காணும் கந்தாச்ரமத்தை அமைத்தும் குறிப்பாக நிழல்தரும் மரங்களையும் வைப்பதற்கு அகன்ற ஆளுயர குழிகளை வெட்டி மரக்கன்றுகளை நட்டார். பகவான் இவருடைய தனிப்பட்ட சேவையைப் பெரிதும் பாராட்டுவதுண்டு. "தான் தன்னந்தனியாக இருந்து ஏறத்தாழ முழு வேலைகளையும் அசுரத்தனமாக*

*செய்து முடித்தான்" என்று கந்தசாமியைப் பற்றிக் கூறுவதுண்டு.*

*1915 அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் பகவான், பக்தர்கள் மற்றும் அன்னையார் சூழ கிருகப்பிரவேசம் நடத்தப் பெற்றது. அதைக் கட்டிய கந்தசாமியின் நினைவாக பகவான் அதற்குக் கந்தாச்ரமம் என்று பெயரிட்டார்.*

*மானுடர்கள் மட்டுமல்லாது, அந்த இந்திரனே வந்து சேவை புரிகின்றான் என்ற பொருளில், திருப்பூவல்லி 17வது பாடலில் பகவான் பச்சையம்மன் கோயிலில் இருக்கும்பொழுது எவ்வாறு முள்ளைக் கொண்டே தன்னுடைய கௌபீனத்தைத் தைத்தார் என்பதைக் குறிப்பிடுகின்றார்.*

*"முள்ளினால் இசைத்த முழுக் கோவணன் ஆயிரங் கண்ணன் கள்ளமாய் உருக்கரந்த கைத்துணியான் வேங்கடன்" என்று கூறுகிறார். அதாவது இரண்டாகக் கிழிந்த கௌபீனத்தை காரைமுள்ளினால் ஒன்றாக இசைத்துத் தைத்து கோவணத்தை அணிந்தவனும் ஆயிரங்கண் படைத்த இந்திரனே தன்னுருவை மறைத்து கைத்துண்டாக வந்து சேவை செய்வதுபோல் கணக்கற்ற ஓட்டைகளுடன் நைந்து கிழிந்த கைத்துண்டை உடையவனுமான வேங்கடன் என்று கூறுகிறார்.*

*திருவாசக 'அதிசயப் பத்தில்' மணிவாசகர், பிரம்மா, ருத்ரன் விஷ்ணு மூவரும் எட்ட நின்று சிவபெருமானுக்குச் சேவை செய்வதாகக் கூறுகின்றார். இதைத் தழுவி முருகனார் 'திருவுருக்கண்ட பத்தில்', ரமணனை இரும்பு மென்மையும் பஞ்சு வன்மையும் கொண்டவன் என்கிறார். யானையின் கனவில் வரும் சிங்கம் போல் தன்னுடைய அஞ்ஞான உறக்கத்தில் சிங்கமாய் வந்த குருரமணன் தன்னை ஞான விழித்தலுக்கு கொண்டுவந்ததைக் கூறுகின்றார். இதில் இறைவர் மூவரும் ரமணனுக்கு தூரத்தினின்று ஏவல்*

*செய்திடுகின்ற மகிமையை அறியா மடைமை நாம் கண்டோமே என்கின்றார்.*

*உபதேச மஞ்சரியின் சாரம்சமும் இறைபணி நிற்றலை இவ்வாறு விளக்குகிறது:*

*ஆண்டவன் அடிமையாக செய்துவரும் நிஷ்காம்ய பக்தியின் முடிவில் தன்னுடைய செயல்கள் என்பதனையெல்லாம் தலைவனுடையதுவே என்று கூறுவது பக்தி. சைவ சித்தாந்தம் கூறும் இறைபணி நிற்றலும் இதுவேயாம். தான் என்பது ஈசுவரனேயன்றி வேறாகவில்லை என்று உணர்ந்து அகங்காரம் அற்று விளங்கலே ஞான (விசார) மார்க்கத்தின் முடிவாகும்.*

*பகவத் கீதையும் இதே கருத்தினை,*

***ஸ்2ரேயோ ஹி ஜ்ஞாநமப்4யாஸாஜ் ஜ்ஞாநாத்3த்4யாநம்***
***விஸிஷ்யதே |***
***த்4யாநாத் கர்மப2லத்யாக2 க3ஸ்த்யாகா3 ச்சா2ந்திர***
***நந்தரம் || 12 12||***

*பயிற்சி, ஞானம், தியானம் இவையனைத்தைக் காட்டிலும் செய்கைப் பயன்களைத் துறந்து விடுதல் மேம்பட்டது என்பதை வலியுறுத்துகிறது.*

*முழுவதுமாக சரணாகதி அடைந்து, தாம் செய்கிறோம் என்ற பெருமிதமோ, அல்லது அதனால் வரும் பயனை எதிர்நோக்காமல் இருப்பதே தன்னலமற்ற சேவையாகும். பகவத் வசனாம்ருத நூலில் 14/8/38 தேதியிட்ட நாட்குறிப்பில் ஜம்னாலால் பஜாஜ் பகவானிடம் சில கேள்விகளைக் கேட்டுத் தன்னுடைய சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டார். தன்னலமற்ற சேவை குறித்து பகவான் அளித்த விடையினை இங்குக் காண்போம்:*

*பகவான்: சுதந்திரத்திற்காகப் பாடுபடும் தொண்டர்கள், தாய்நாட்டிற்காகத் தாங்கள் செய்யும் தொண்டுகள் தங்களைவிட பெரிய சக்தியால் நடத்தப்படுகின்றது என்று மனத்தில் நினைத்து, அந்த சக்தியிடம் மனதால்*

*சரணாகதி அடைந்து காரியம் செய்தால் சுதந்திரம் கிடைத்தாலும் அதற்காக அவர்கள் பெருமிதம் அடைய மாட்டார்கள். ஏனெனில் தங்களுடைய கர்மாவில் கிடைக்கும் பலனை எதிர்பார்க்கக் கூடாது. அப்பொழுது தான் கர்மா என்பது நிஷ்காம்ய கர்மாவாக, சுயநலமற்ற தன்னலமற்ற கர்மாவாகும்.*

*தாம் செய்கிறோம் என்கிற பாவம் இல்லாமல் தியாக மனப்பான்மையுடன் செய்யப்படும் நிஷ்காம்ய கர்மா இறுதியில் நான் என்பதை அழித்து ஞானத்தை அடைய உதவும் என்பதை வசனாம்ருதம் நூல் 19/11/38 தேதியிட்ட நாட்குறிப்பில் காணலாம்:*

*ஒரு குழந்தை, பகவானுக்கு அளிப்பதற்காக ஒரு பொருளை கையில் வைத்துக் கொண்டு இருந்தது. அதை பகவானுக்கு அளிக்கும்படி அக்குழந்தையின் பெற்றோர் கூறினர். குழந்தையும் மகிழ்ச்சியோடு அதை பகவானுக்கு கொடுத்தது. பகவான், இதைப்பற்றி பின்வருமாறு கூறினார்:*

*“இங்கே பாருங்கள்! குழந்தை கடவுளுக்கு கொடுக்கும்போது அது தியாகமாகும். குழந்தைகளிடம் கூட கடவுள் எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகிறார் பாருங்கள். ஒவ்வொரு தானமும் தன்னலமற்றதை குறிக்கின்றது. இதுதான் நிஷ்காம்ய கர்மத்தின் சாராம்சம். இதுதான் துறவு. இந்தக் கொடுக்கும் குணத்தை விரிவாக்கினால் தியாகமாகும். கொடுப்பதை ஆர்வத்தோடு கொடுத்தால் அது கொடுப்பவனுக்கும் வாங்கிக் கொள்பவனுக்கும் மகிழ்ச்சி அளிக்கின்றது. இந்தப் பொருளே திருட்டுப் போனால், அது இருவருக்கும் துன்பத்தை அளிக்கின்றது. தானம், தர்மம், நிஷ்காம்ய கர்மம் எல்லாமே தியாகம்தான். எனது என்பதை இழந்துவிட்டால் அது சித்த சுத்தியாகும். இறுதியாக நான் என்பதை அழித்துவிட்டால் அது ஞானமாகும்.”*



ஒரு எளிய மனிதன் பகவான் மலை மேல் செல்லும் போதெல்லாம் அவரைப் பின்தொடர்ந்து செல்வதுண்டு. ஒருநாள் பகவான் அவனை அருகில் அழைத்து, ‘சிவ, சிவா’ என்று சொல்லிக் கொண்டேயிரு, என்று உபதேசித்தார். இவ்வாறு தானாக முன்வந்து தன்னுடைய திருவாயால் அவர் உபதேசம் செய்வது மிகவும் அபூர்வம். இது பகவானுடைய எல்லையற்ற அருளினால் மட்டுமே அவனுக்குக் கிடைத்தது.

முழுமையாக அர்ப்பணித்த பக்தனுக்கு எப்போது, எவ்விதம், என்ன தேவை என்று அறிந்து அவன் கேட்காமலேயே குரு அவனுக்கு தக்கசமயத்தில் காப்பாற்றி அருளுவார். இதனை பகவான் ரமணர் தனது ஞானத் தந்தையாம் அருணாசலேசனிடம் இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்.

***கேளாதளிக்கும் கேடில் புகழைக்***
***கேடுசெய் யாதரு ளருணாசலா***

***- (22, அக்ஷரமணமாலை)***

*அன்பர் ஒருவர் பகவானை விட்டு விடைபெற்றுச் செல்லும்போது தான் மிகவும் தொலைதூரத்திற்குச் செல்வதால் மீண்டும் ஆச்ரமத்திற்கு வருவது சந்தேகம்தான். ஆகையால் பகவான் தன்னை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று வேண்டினார். அதற்கு பகவான், "ஞானிக்கு மனது கிடையாது. எனவே மனமில்லாத ஒருவன் எவ்வாறு நினைப்பது அல்லது நினைவில் வைத்துக் கொள்வது? இவர் எங்கேயோ செல்கிறார், நானும் அங்கேயே சென்று அவரைக் கவனித்துக் கொள்ள வேண்டும். இவர்களுடைய பிரார்த்தனைகளை யெல்லாம் நான் நினைவில் வைத்துக் கொள்ள முடியுமா? சரி! உன்னுடைய பிரார்த்தனையை, எல்லாம்வல்ல இறைவனிடம் கூறி விடுகிறேன். அவன் உன்னைக் காப்பாற்றுவான். இது அவனுடைய கடமை" என்றார்.*

*அவ்வன்பர் சென்றபிறகு அங்கிருந்தவர்களிடம் பகவான் பின்வருமாறு கூறினார்:*

*"ஞானியைச் சுற்றி உள்ளவர்களுக்கு மட்டுமே பிரத்யேகமான கிருபை கிடைக்கிறது என்று மக்கள் நினைத்துக் கொள்கிறார்கள். ஒரு குருவுக்கு இவ்வாறு விருப்பு, வெறுப்பு இருந்தால் அவன் எவ்வாறு ஞானியாவான்? அவனுடன் இருப்பதாலும் அவனுக்குச் சேவை செய்வதாலும் ஒரு ஞானியை திருப்தியடையச் செய்ய அவன் அறிவிலி இல்லை. அவனுக்குத் தூரம் ஒரு பொருட்டாகாது. யார் தன்னை முழுமையாக ஒப்படைத்துத் தன் அகந்தையை முழுமையாக விட்டு விடுகிறானோ அவனையே குரு விரும்புவார். அவன் எங்குச் சென்றாலும் அவன் காப்பாற்றப்படுவான். அவன் தனியாக எதற்காகவும் பிரார்த்தனை செய்யத் தேவையில்லை. அவன் கேளாமலே அவனுக்கு இறைவன் அளிப்பான். தாமரை மலருக்கு அடியில் வசிக்கும் தவளைக்கு*

*அம்மலரிலுள்ள தேன் கிட்டுவதில்லை. எங்கிருந்தோ வரும் வண்டுதான் அதனைப் பெறுகிறது. அதுபோலத்தான் குருவின் அருளை எங்கிருந்தோ வருபவர்கள் பெறுகிறார்கள்.*

*குருவிற்கு நாம்தான் பலவாறு கைங்கர்யம் செய்கிறோம். பல நூல்கள் கற்றுள்ளோம். நமக்குத்தான் குருவருள் என்று தற்பெருமையோடோ கர்வத்தோடோ உலாவருபவர்களுக்கு உரைக்கும் வண்ணம் பகவான் சரிதத்தில் பல்வேறு எளிய அன்பர்களுக்கும் பகவான் அருளியுள்ளார்கள். அன்போடு முழுமையாக இறைவனுக்கு தம்மை அர்ப்பணித்து சேவை செய்பவர்களுக்கு கடவுள் அருளும் குருவருளும் எப்போதும் உண்டு என்பதை சாந்தம்மாளின் நினைவுகளில் உள்ள இந்த நிகழ்வுகளின் வாயிலாக கண்டோம்.*

*ஒருதா யுதரத்தும் பிறவா தடியாரை*
*ஒருதா னிரங்கிப்போந் துதவுங் குருமூர்த்தி*
*இருதா மரைப்பாத மியத் தெப்போதும்*
*கருதா நின்றாரைக் கருதா வினைதாமே.*

*- (சந்நிதி முறை, வினைநீக்கம், 7)*

*முருகனார், வினைநீக்கப் பதிகத்தில், பகவானது தாமரைப்பாதத்தினை பற்றியுள்ள அடியார்கள் அனைவரும் பாரபட்சமின்றி ரட்சிக்கப்படுவர் என்பதனை உறுதிப்படுத்துகிறார்.*

*அணிலோ அனுமனோ யாராயிருந்தாலும் அவர்களது ஆத்மார்த்தமான பக்திக்கும் சேவைக்கும் ஸ்ரீ ராமபிரான் அருள் கிடைத்தது. கந்தனோ, காவ்யகண்டரோ எவராயினும் தாம் செய்கிறோம் என்ற பாவம் இல்லாத உண்மையான பக்தியின்பால் செய்யும் கைங்கர்யத்துக்கு குரு ரமணபிரானின் அருள் உண்டு என்பதைத் தெளிவோம்.*

## சிதம்பர குற்றாலம்

*பாடல் 6*

*உடல்உயிர் பொறிகள் புந்தி ஒன்று(ம்)பாழ் அகமாத் தேர்வர்*
*மடந்தையர் பாலர், அந்தர் மடையர்ஏய் மூடவாதி*
*மடமையால் விளையும்அம்மா மயக்கமே மாய்க்கும் ஞானத்*
*தடையறு குருவாம் அந்தத் தட்சிணா மூர்த்தி போற்றி.*

பெண்களும், பாலகர்களும், பார்வையற்றவர்களும், அறிவில்லாத மூடவாதிகளும், இந்த உடல், உயிர், ஐம்பொறிகள், புத்தி இவைகள் ஒடுங்கும் சூன்யம் ஆகியவைகளையே தானாகக் கருதுகின்றனர். இந்த மூடவாதிகளின் அறியாமையால் உண்டான மயக்கமே உண்மையை அறிவதற்கு தடையாக உள்ளது. இந்த மயக்கத்தை, தடைகளை அழிக்கும் ஞான குருவான தென்முக மூர்த்திக்கு வணக்கம்.

**ஒப்பு:**

*பாராதி பூதம் நீயல்ல உன்னிப்பார் இந்திரியம் கரணம் நீயல்ல*
*ஆராய் உணர்வு நீ என்றான் ஐயன் அன்பாய் உரைத்த சொல்*
*ஆனந்தம் தோழி சங்கர சங்கர சம்பு*

*- (தாயுமானவர் ஆனந்தக்களிப்பு-9)*

பூமி முதலான பூதங்கள் ஐந்தும் நீயல்ல, உள்ளாழ்ந்து கவனித்துப்பார். இந்திரியங்களும், கரணங்களும் நீயல்ல, ஆராய்ந்து அறிகிற உணர்வே நீ என்று இறைவன் அன்புடன் சொன்ன சொல் ஆனந்தமாக உள்ளது தோழி, சங்கர சங்கர சம்பு என்கிறார் தாயுமானவர். அறியாமைத்திரை அகலும் பொழுதுதான் ஆனந்தம் உணர்வாகும்.

***பெண்கள்:***

*இவர்கள் கணவனைச் சார்ந்தே வாழ்கிறார்கள். கணவன், குழந்தைகள், குடும்பம் என இல்லற பற்றுமிக்கவர்கள் பெண்களே. பற்றுதலே அறியாமையின் தொடக்கம். தொடர்வது பந்தமும், பாசமும். இதுவே அவர்களின் அறிவுக்கண்ணை மூடிவிடும். அறியாமையின் முழுவடிவம் இருமையே. ஒருமையை நோக்கியப் பயணத்திற்கு இருமை தடையாக இருப்பதால் சங்கரர் பெண்களை அறியாமைப் பட்டியலில் சேர்த்துள்ளார்.*

*அறிவில் சிறந்த பெண்களுமுண்டு, ஞானியர்களுமுண்டு. அத்வைத சித்தாந்த நிலைநாட்டும் சங்கரரின் திக்விஜயத்தில் சங்கரரின் விவாதம் ஒன்றில் பாரதி என்ற பெண்ணே நடுவராக இருந்ததாக செய்திகள் உண்டு. சங்கரரே நடுவராக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றால் அவள் அறிவில் சிறந்தவளாகத்தானே இருக்க முடியும். மைத்ரேயி மற்றும் கார்க்கி என இரண்டு சிறந்த பெண் ஞானியர்கள் இருந்ததாக பிருஹதாரண்ய உபநிடதம் கூறுகிறது. இறைவனாலேயே அம்மை என்று அழைக்கப்பட்டவர் காரைக்கால் அம்மையார். அறிவில் சிறந்த அவ்வையை அகிலமும் அறியும். “ஆணுக்கும், பெண்ணுக்கும் அறிவு ஒன்றேயாம்” என்கிறது சிவானந்தபோதம். “ஞானம் இருபாலர்க்கும் பொது” என்பார் பகவான் ரமணர். உயிர், பயிராவது பெண்களிடந்தான். ஞானிகளைச் சுமந்தவர்களும் பெண்களே. கருப்பையே ஆலயங்களில் கருவறை யாகவும் வடிவம் பெற்றுள்ளது. தெய்வத்தையே பெண் வடிவில் வழிபடுகிறோம். சிறப்புகள் ஆயிரம் இருந்தாலும் இருமை இருளில் உள்ளவரை அறியாமையே ஆட்சி செய்யும். அதனாலேயே சங்கரர் பெண்களை அறியாமைப் பட்டியலில் இணைத்திருக்கிலாம்.*

*பாலகன்:*

*இவர்கள் வளர் பருவத்தில் இருப்பதால் வாழ்க்கையைப் பற்றிய அனுபவ அறிவு இருப்பதில்லை. அறிவு முழுமையடையாத நிலையில் அறியாமையே மேலோங்கி இருக்கும். ஆராயும் திறன் மங்கியிருப்பதால், காட்சிகளில் மயங்கி அதுவே உண்மை எனக் கருதி புறசுகத்திலேயே இருப்பர். புறப்பற்றுதல் உள்ளவரை அகவிழிப்புக்கு வழியில்லை. இவர்கள் எப்பொழுதும் அறியாமை இருளிலேயே இருப்பர்.*

*மூடர்கள்:*

*கல்லாதவர்கள் மட்டுமல்ல, கற்ற சிலரும் இதில் அடங்குவர். இவர்கள் தங்களது அறிவுக்கு எட்டியதையே சரியென வாதிடுவர். ஆசையைப் பற்றி அறிவை வளர்த்துக் கொண்ட இவர்களிடம் உண்மையை உணரும் ஆர்வம் இல்லாததால் அறியாமை நிலைத்து விடுகிறது. "கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்" என்கிறார் ஞானசம்பந்தர். அறியாமை இவர்களைச் சூழ்ந்தே இருக்கும். இவர்களால் உண்மையை உணர முடியாது என்கிறார் சங்கரர்.*

*இந்த வாழ்க்கைக்கு உடம்பே ஆதாரமாக உள்ளது. அதனால் உடலே ஆன்மா என்கின்றனர் இந்த மூடர்களில் சிலர். பிராணன் உள்ளவரைதான் உடல். பிராணன் போனபின், உடல் பயனற்றதாகி விடுகிறது. ஆகவே பிராணனே ஆன்மா என்கின்றனர் சில மூடர்கள். உடல் வழியாக உலகைக் காண்பது இந்திரியங்களே. மனம் இந்திரியங்களுடன் இணைந்து செயல்படும் நிலையே நினைவுலகம். தூக்கத்தில் மனமும் இந்திரியங்களும் செயலற்று விடுவதால் உலகமுமில்லை. எனவே இந்திரியங்களே ஆன்மா என்கின்றனர் சில மூடர்கள். புத்தியினாலேயே உலக இயக்கங்கள் அறியப்படுகிறது. நடந்தவைகளையும்*

*நினைவாற்றல் மூலம் நினைவூட்டுவதும் புத்தியே. அதனால் புத்தியே ஆன்மா என்கின்றனர் சில மூடர்கள். இந்த வாதங்களுக்கு அவர்களது அறியாமை மயக்கமே காரணம். தங்களது அறிவிற்கு எட்டியதையே சரி என்று வாதிடுகின்றனர். அவர்கள் உண்மையைத் தேடுவதற்கு இதுவே தடையாக உள்ளது. இந்தத் தடைகளையும் மனமயக்கத்தையும் அழிக்கவல்ல ஞான குருவான தென்முகக் கடவுளுக்கு வணக்கம்.*

*ஒப்பு:*

*மத்தி உடல் நானல்லன் வளர் கரணம் நானல்லன்*
*மொய்த்த இந்திரியன் நானல்லன் மூலவாயு நானல்லன்*
*சித்திர தீபம் போல சீவ பாவங்கழன்று*
*நித்திய சிவம் தானாகி நிற்பது ஞான நிஷ்டை.*

*இந்த உடல் கரணங்கள், பிராணன் எல்லாம் நான் அல்லன். புற அறிவெல்லாம் அகன்று வினைகளிலிருந்து விடுபட்டு சித்திர தீபம்போல் அசையாமல் தன்னிலிருப்பதே ஞான நிஷ்டை, அதுவே நான். "உங்களது உண்மையான இருப்பு, நாமரூபங்களற்ற தன்மயம். அந்த சுவானந்த சொரூபத்தில் சுகமாய் அமருங்கள்" என்கிறார் ஞானேஸ்வரர். அறியாமையே அந்த சுகத்தை மறைக்கும் திரையாக உள்ளது. திரை அகலும்பொழுது உள்ளது உணர்வாகி விடும்.*

**ரமணோதய அன்பர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்**

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவைப் புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## மௌனிசாது
## மொழிமாற்றம்: ராம் மோஹன்

### 34. தொடர்புகள்

*அமெரிக்காவிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் கடிதங்களில் நான் அடிக்கடி இந்தக் கேள்வி கேட்கப்படுவதைக் கண்ணுறுகிறேன்.*

*“பண்டைய இந்திய ஞானிகள் தியானத்திற்காகக் காட்டும் வழிமுறைகளில் எது மகரிஷிகளின் போதனைகளுடன் பெரிதும் ஒத்திருக்கிறது?*

*அல்லது; ஞான நெறிகளை நாம் பின்பற்றும்போது, நமது தனித்தன்மை குறித்த நம் மனப்பாங்கு எங்ஙனம் அமைந்து இருக்க வேண்டும்?”*

*பகவான் திருவடி நிழலில் நான் கற்ற தெளிவு, இதே போன்ற ஐயம் கொண்ட ஏனைய பக்தர்களுக்குப் பயன்படலாம். அவர்தம் பொருட்டு, என்னுடைய தொடர்புகளில் இருந்து நான் பெற்ற அனுபவத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.*

*பகவான், சங்கரரின், “விவேகசூடாமணி” நூலினைப் பெரிதும் போற்றுவார். பல இந்துக்கள் பகவானையே சங்கரரின் மறு அவதாரமாக கருதுகின்றனர். சங்கரரின் இந்நூல் தத்துவ ஞானத்தின் சிகரமாகக் கருதப்படுகிறது. எனவே இதிலிருந்து, நான் எனது தினசரித் தியானத்தில் பயன்படுத்தும் சில உயரிய ஸ்லோகங்களை எடுத்துக் கூற விரும்புகிறேன். இங்கே பயன்படுத்தப் பெறும் ‘பிரம்மன்’ எனும் சொல் தெய்வீகத்தின்*

*உச்சி நிலையையும் 'பரப் பிரம்மன்' என்ற சொல் பூர்ணத்துவத்தையும் குறிக்கிறது.*

*'லோகோஸ்' என்ற ஆங்கில வழிச் சொல்லும் 'முழுமை' அல்லது 'அண்டத்தை உருவாக்கியவனைக்' குறிக்கிறது.*

*ஸ்லோகம் 409*

*ஒரு ஞானி தன் இதயத்தில் நிரந்தரமான ஞானத்தையும், தூய பேரானந்தத்தையும், ஒப்பற்ற உண்மையையும், மாசுமறுவற்ற உணர்வையும், பேதா பேதமற்ற நிலையையும், இவை அனைத்தையும் ஸர்வ வியாபியான பிரம்மத்தின் வெளிப்பாடு என்பதையும் உணர்கிறான்.*

*ஸ்லோகம் 255:*

*ஜாதி, உலக அறிவு, குடும்பம், சுற்றம் அனைத்தையும் கடந்த நாமம், ரூபம், குணங்கள், குறைகள், காலம், இடம், ப்ரக்ஞையில் உணரும் பொருட்கள் அனைத்தையும் கடந்த ப்ரம்மமே நீ என்பதை அறிவாய்.*

*ஸ்லோகம் 256:*

*நீதான் அனைத்திலும் உயர்ந்த ப்ரம்மம். சொற்களைக் கடந்த, விவரிக்க ஒண்ணாத ஒன்று. அதேசமயம் சுத்த ஞானத்தின் மூலம் அறியப்படுவது. அது மிகத் தூயது, முழுமையான ப்ரக்ஞை உணர்வு, நிரந்தரமான ஒன்று என்பதை அறிவாய்.*

*ஸ்லோகம் 257:*

*பசி, தாகம், பேராசை, மதிமயக்கம், சிதைவு மற்றும் இறப்பு ஆகிய ஆறு மனிதக் குறைபாடுகள் சற்றும் தொடப்பெறாத 'அந்தப் பிரம்மமே நான்' என்பதை அறிவாய். இது சமாதி நிலையில் யோகிகளால் அறியப்படுவது. இதை பௌதிக இந்திரிய அறிவால் அறிய முடியாது. அறிவாலோ, மனத்தாலோ அறிய இயலாது.*

*ஸ்லோகம் 258:*

*இந்த வையம் முழுவதும் எதைச் சார்ந்துள்ளதோ அதுவே நீயாகிய பிரம்மம். அஞ்ஞானத்தால் உருவாக்கப்பட்ட இந்த வையகம் அது தன்னிறைவு உடையது. அந்த ஒப்பிட்டு உண்மையில் இருந்து வேறுபட்டது. இது பொய்ம்மையில் இருந்தும் வேறுபட்டது. இது பகுத்தறிய முடியாதது. இது மனத்தாலும் உருவகிக்க முடியாத ஒன்று.*

*ஸ்லோகம் 260*

*எல்லாப் பாகுபாடுகளையும் கடந்த ஒன்று. அது எப்போதுமே தன்னுடைய சுய இயற்கையில் மாறாத ஒன்று. அலையற்ற கடல்போல் தன் நிலையில் சற்றும் மாறாதது. கட்டுப்பாடற்றது. பாகுபாடற்றது. அதுவே 'நீ' என்று அறிவாய்.*

*ஸ்லோகம் 261*

*'அது' - பிரம்மன் ஒன்றே சத்யமானது. அதுவே வேறுபாடுகளை உருவாக்குகிறது. வேறு எல்லாக் காரணங்களுக்கும் மூலகாரணம். அதுவே காரணம்-விளைவு என்றத் தொடர்புக்கு அப்பாற்பட்ட அனைத்தையும் அது நீக்கி வருகிறது. அதுவே 'நீ'.*

*ஸ்லோகம் 263*

*நாமம், ரூபம், குணங்கள் மாற்றங்கள் அனைத்துமாய் வெளிப்பட்டு அதேசமயம் வெவ்வேறு ஆபரணங்களால் வெளிப்பட்டாலும், அடிப்படையில் ஆதார உலோகமாய் தாங்கள் இருப்பதுபோல் மாறாமல் உள்ள 'அதுவே' நீ என்பதை அறிவாய்.*

*ஸ்லோகம் 264*

*வையகம் அனைத்தையும் கடந்து ஒளிரும் 'ஒன்று', ஸர்வ வியாபி, இது அனைத்துடனும் ஒத்திசைவு*

கொண்டது. இதுவே முடிவற்ற ப்ரக்ஞை உணர்வு, அழிவற்றது. 'அது'வே நீ என்பதை அறிவாய்.

இவை எத்தகைய ஒப்பற்ற ஞானக் கருத்துகளின் சிகரங்கள்? ஒரு மஹா சத்யம் ஆட்சி செய்கின்ற எல்லையற்ற வெளியில் ஓங்கி நிற்கும் பேருண்மைகள் இவை அல்லவா?

ஞானப் பாதையில் பயணிக்கும் சாதகன் தன்னுடைய தன்மை என்பது ஒரு கவனப் புள்ளி அல்லது ஆதாரமையம் என்பதை அறியத் தொடங்குகிறான். இறைவனையே ஆதாரமாகக் கொண்ட அவனுடைய வாழ்வில் இந்த ஆதார மையத்தின் வாயிலாகவே தெய்வீகப் பேரொளி பரவுகின்றது. ஆயினும் இந்த மையப் புள்ளியே அவன் அல்லன்.

இந்த மைய உணர்வை எப்போதும் மிகத் தூய்மையாக வைத்துக் கொள்ள அவன் பெரு முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் அந்த மையத்தின் வாயிலாக தெய்வீகப் பேரொளி பரவி வரும். வேறு எதிலும் கவனத்தைச் சிறத விடாமல், அவன் கவனம் முழுவதும் இதிலேயே பதிந்து இருக்க வேண்டும். ஆத்ம சாட்சாத்காரத்தின் மூலம் அகங்காரம் எங்ஙனம் முற்றிலும் அழிபடுகிறது என்னும் அறியப்படாத பேருண்மை இங்கே தெளிவாகிறது. அப்போது மெய்யான ஆன்ம விடுதலை சித்திக்கிறது. இங்ஙனம் தன் நோக்கினை மையப்படுத்தும் முயற்சி வெற்றி பெறும்போது, அதுவும் வலியோ, வருத்தமோ இன்று உதிர்ந்து விடுகின்றது. அதேசமயம் இதை உயிரோட்டமான மெய்மையாக உணரும்போது மட்டுமே சித்திக்கும் என்பதையும் அது வெறும் வறட்டு வேதாந்தக் கருத்தாக எண்ணிவிடக் கூடாது என்பதையும் உணர வேண்டும். இதுவே மிக உயர்ந்த ஆன்மிக தீக்ஷை.

எந்நிகழ்விலும், இந்த உணர்வு பொதிந்துள்ளது. ஓரம் சாராது நடுநிலைமையில் ஒரே நோக்கில் பயணிக்கும்

*மனம்தான் ஸத்யத்தை அடைய முடியும். அதுவே சமாதி நிலை. சமாதிநிலையுற்றபோது இடையூறுகள் ஏற்படுமெனில் சாதகன் மனம் இன்னும் முற்றிலும் அடங்கவில்லை என்பது பொருளாகும். இது மீண்டும் உயிர்பெற்று செயல்பாடுகளில் ஈடுபடத் துவங்கும். இன்னமும் பக்குவம் அடையாத நிலையில் அது மனமடங்குதலை விட்டுத் தப்பியோடத் துவங்கும்.*

*ஸத்குருவின் திருமுன்னர் எத்தகைய மனநிலையைக் கொண்டிருக்க வேண்டும்?*

*முற்றிலும் மனமடங்கி இருப்பதைக் காட்டிலும் ஒரு மஹானின் சந்நிதியில் பரிணமிக்கச் செய்வது வேறு எதுவும் கிடையாது. அது இதயக் கோவிலின் கதவுகளைத் திறக்கச் செய்கிறது. அது அம் மஹான் இதயத்துள் பிரவேசிக்க உதவி செய்கிறது. மற்ற எந்த இடத்தில் இருப்பதைக் காட்டிலும் பகவானின் அருகாமையில் இருப்பது, மனம் முழு சாந்தி நிலையை அடைவதை மிக எளிதாக்குகிறது. பல சமயங்களில் பக்தர்கள் தமது சமயாசாரங்களின்படி பிரார்த்தனை செய்யினும் மனமடங்குதல் என்ற இந்த நிலை தானாகவே சித்திக்கிறது. பகவானின் சந்நிதியில், நாம் நமது உள்ளுணர்வால் உந்தப் பெற்று, சரியான தியான மனோநிலை எய்துகிறோம்.*

**ஆத்மாவும் வெளிப்புற உலகும்:**

*இதுகுறித்து பகவானே Maharshi's Gospel என்ற நூலில் விவரமான விளக்கத்தை ஈந்துள்ளார். எனவே, இங்கு நான் கூறுவதற்கு ஒன்றுமே இல்லை. எனினும் நீங்கள் ஒரு பௌதிக உதாரணம் மூலம் இதை அறிய விரும்பினால், ஒரு எடுத்துக்காட்டை அளிக்கிறேன்.*

*“ஒருவர் தோலால் ஆன கையுறைகள் அணிந்து கொண்டு பியானோ வாசிக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். கையின் உருவிலேயே செய்யப்பட்ட*

*தோல் அணியையே நீங்கள் காண்கிறீர்கள். உள்ளீடான உண்மை விவரங்களை நீங்கள் காண முடிவதில்லை. அறிவற்ற ஒருவன், கையுறையின் தோல், கலைஞனின் கையின் இணைபிரியாத பாகம் என எண்ணிக் கொள்வான். இதுபோன்றே, ஆத்மாவைப் பற்றி அறியாத மனிதர்கள் பௌதிக நிலையைத் தாண்டி ஆத்மிக நிலை உள்ளது என்பதை அறிந்து கொள்ள முடிவதில்லை."*

*ஆனால் பியானோவின் விசைகளை அழுத்தி அதிரச் செய்து சங்கீதம் உண்டாவது உண்மையில் கையுறைகட்கு உள்ளிருக்கும் கைகளும் விரல்களும் என்று அறிந்தவனுக்கு உள்ளே உயிருள்ள கைகளை உள்ளடக்காத கையுறைகள் பயனற்றவை என்பதை அறிவான். (இந்த உதாரணத்தில் பற்றாக்குறை என்னவெனில் உறைக்குள் அடங்கியிருக்கும் கைகளை வாசிக்கும்போது உங்களால் காணவே இயலாது. அப்படிக் காண முடியுமானால் நீங்களே கைகளாய் மாறிவிடுவீர்கள்.)"*

*"கடவுளைக் காண்பது என்பது கடவுளாகவே இருப்பதுதான்." - Maharshi's Gospel*

***தீக்ஷை அளிக்கும் அமைப்புகள்:***

*நீங்கள் கேட்கலாம், அப்படியானால், இக்காலத்தில் ஏராளமான அமைப்புகள் ஞான தீக்ஷை அளிப்பதாக கூறுகின்றனவே. ஜாக்ரதையாய் இருங்கள். நாம் தவறான வழிகாட்டுதலைப் பின்பற்றக் கூடாது. நீங்கள் எனக்குத் தண்ணீரை அளிக்க விரும்பினால், முதலில் உங்களிடம் தண்ணீர் இருக்க வேண்டும்? இத்தகைய குழுக்களின் தலைவராக இருப்பவர்கள், தாமே மிக உயர்ந்த ஆன்மிக நிலையை அடைந்தவராக இருந்தாலன்றி, அவர்தம் நூல்களும் உபதேசங்களும் ஒரு சாமான்ய மனிதனின் மனக் கற்பனைகளைக் காட்டிலும் எந்த வகையிலும் உயர்ந்ததல்ல. தமது உபதேசங்களுக்கு அவர்களே உதாரண புருஷர்களாக*

வாழ்ந்துகாட்ட வேண்டும். ஆத்ம ஞானத்தை முற்றிலும் பெற்றுள்ளதைத் தம்வாழ்வில் நடத்திக் காட்ட வேண்டும். இங்ஙனம் உனது ஆத்மாவே இவற்றைப் புறந்தள்ளிவிடும். அது ஒரு முழுமையான ஆத்ம சாட்சாத்காரம் பெற்றவரையே உமது லட்சிய குருவாக எதிர்நோக்குகிறது. நான் இதுகாறும் எந்த ஒரு ஞானியும் ஒரு குழாமையோ, வணிக ரீதியான அமைப்பையோ நடத்திப் பார்த்ததில்லை? நீங்கள் இதனைச் சிந்தித்துப் பார்த்தால் உங்களுக்கே உண்மை புலப்படும்.

**ஆத்மாவை உணர்வதற்கு ஏற்படும் தடைகள்:**

மஹரிஷி தனது Gospel நூலில், "ஆத்மாவை அறிய தடைகளாக உள்ளவை, அலையும் மனமும் ஒழுக்கமற்ற வாழ்க்கை முறையுமே" என்று குறிப்பிடுகிறார். அஹங்காரமும் தன்னை பௌதிக உடலாக நினைத்துக் கொள்ளுதலும் அஞ்ஞானத்தின் ஆணி வேர்கள். அவை உன்னை ஆன்மிகப் பாதையில் பயணிப்பதிலிருந்து செய்கின்ற இந்த இடையூறுகளால் 'நான் யார்?' எனும் ஆன்ம விசாரத்தால் உன்னால் புகமுடிவதில்லை என்கிறார்.

x என நாம கரணமிடப்பட்ட ஒருவனை எடுத்துக் கொள்ளுங்கள், "எனது வயது இத்தனை ஆண்டுகள். என் தோற்றம் இங்ஙனம் அமைந்துள்ளது. நான் இந்தத் தேசத்தையும், தொழிலையும் சார்ந்தவன் என்றே 'நான் யார்' என்பதற்கு அளிக்கப்படும் தவறான விடைகள். 'நான் பிறந்து விட்டேன். எனவே இறக்கத்தான் வேண்டும்' என்று எண்ணுகிறேன். 'நான் யார்' என்ற விசாரத்தில் முன்னர் இருந்த தவறான எண்ணங்கள் அனைத்தும் முற்றிலும் நீங்க வேண்டும்.

ஒரு யோகி கூறுகிறார், "பரம சத்தியத்திடம் முற்றிலும் சரண் புகுந்த ஒருவனது ஆத்மா எல்லையற்ற பரமாத்மாவிடமே கரைந்து போகிறது." இதுவே விசார வழி.

*பிரார்த்தனை:*

*“நான் ஒரு கிறிஸ்தவன். இறை நம்பிக்கை கொண்டவன். ஆயினும் என்னால் தியானம் செய்ய முடியவில்லை. என்னால் பிரார்த்தனை செய்ய மட்டுமே முடிகிறது. இந்தப் பிரார்த்தனை மூலம் மட்டுமே எனக்கு ஆன்ம ஜயம் சித்திக்குமா?” என்பது ஒருவரின் வேண்டுகோள்.*

*ஆன்ம ஜயம் என்பது அனைவருக்கும் பொதுவான ஒன்று. ஆயினும் அதனை அடையும்வழி வெவ்வேறு விதமாக அமையலாம். எல்லாச் சமயங்களையும் சேர்ந்த ஞானிகளின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும்போது அவர்கள் அனைவருமே இறைவன்மீது கொண்ட பேரன்பிலும் இறை ஞானத்திலும் ஒன்றுபட்ட சகோதரர்கள் என்பதை அறியலாம். நமது பிரார்த்தனை சுயநலமின்றி அமைய வேண்டும். தான் சிருஷ்டித்த இவ்வுலகை எங்ஙனம் ஆள்வது என்பதை நம்மைவிட இறைவன் நன்கறிவான் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். எனவே, இவ்விஷயத்தில் இறைவனுக்கு நமது அறிவுரை எதுவும் தேவையில்லை. உனக்காக அமைந்திருக்கும் உன்னுடைய பிரக்ஞை உணர்வை மிகச் சரியாகவும், கச்சிதமாகவும் வடிவமைத்திடுக. இதுவே நமது ஒரே குறிக்கோள். இந்த விஷயத்தில் அஸீஸியைச் சேர்ந்த புனிதர் - ஃபிரான்சிஸின் மனம் கடந்த பிரார்த்தனையை எடுத்துக் கூற விரும்புகிறேன்.*

*“இறைவனே! என்னை உனது சமாதான வழிக்கு ஒரு கருவியாக்குக! எங்கே வெறுப்புணர்வு நிலவுகிறதோ அங்கே என்னை அன்பை விதைக்கச் செய். எங்கே நிராசை நிலவுகிறதோ அங்கே என்னை பற்றுறுதியை நாட்டச் செய். எங்கே இருள் ஆதிக்கம் செலுத்துகிறதோ, அங்கே என்னை ஒளியேற்றச் செய். எங்கே சோகம் நிலவுகிறதோ அங்கே என்னை மகிழ்ச்சியை நிரப்பச் செய்.”*

*“தெய்வீகத் தலைவனே! நான் எனக்கு ஆறுதல் தேடுதல் இல்லாமல், பிறருக்கு தேறுதல் அளிக்க அருள்வாய். நான் புரிந்து கொள்வதைக் காட்டிலும் ஏனையோர் என்னைப் புரிந்து கொள்ளட்டும். நான் நேசிப்பதைக் காட்டிலும் பிறர் என்னை நேசிக்கட்டும். பெறுவதைக் காட்டிலும் கொடுப்பதில்தான் நமது நிறைவு அடங்கியுள்ளது. நமக்குத் தவறிழைப்பவர்களை மன்னிப்பதில்தான், நாம் மன்னிக்கப்படுவதும் அடங்கியுள்ளது. நமது இறப்பில்தான் நமது மரணமில்லாப் பெருவாழ்வு அடங்கியுள்ளது.”*

*ஆசானின் பேரருள்:*

*பகவான் தனது Gospel நூலில் இறைவனின் பேரருள் விவரிக்க முடியாதபடி மிக நுண்ணியது எனக் குறிப்பிடுகிறார். இதைப் பற்றி நம் அனைவரையும்விட அவருக்கு நன்றாய்த தெரியும் (ஏனெனில், அவரே பேரருளின் ஸ்வரூபம்!) எனவே வார்த்தைகளில் விவரிக்கவொண்ணா ஒன்றைக் குறித்து நாம் விவரிக்க முற்படுவது ஒரு பயனற்ற செயல். பகவான் எப்பொழுதும் அருளின் செயல்பாட்டைக் குறித்துக் கூறும்போது, “அது தனது உரிய ஆன்மிக ஸ்தானத்தில் தக்கபடி செயலாற்றி வருகிறது. நீங்கள்தான் சொற்களில் அதன் செயல்பாட்டினை விவரிக்க வேண்டும் என்று கோருகிறீர்கள்” என்று மொழிகிறார். வார்த்தைகளால் விளக்கப்பட முடியாத, சொற்கட்டுகளைத் தாண்டிய ஒன்றை சொல்லால் விவரிக்க வேண்டும் என்பது அந்த அருள் பிரவாகத்தை மனது எதிர்பார்க்கும் கட்டுப்பாட்டுக்குள் சிறைப்படுத்துவது போலாகும்.*

*ஆசான் தனது சீடன்மீது செலுத்தும் கவனம் சீடனுடன் குரு கொண்டுள்ள தொடர்பின் சிறப்பியல்பை உணர்த்துகிறது எனக் கொள்ளலாம். எனவே ஆசார்யனின் பேரருளுக்கு நம்மை தகுந்த பாத்திரமாக்கிக் கொள்ள இடையறாது முயற்சி செய்க.*

*சரணாகதி:*

*சரணாகதி என்பது குரு-சிஷ்ய பாவத்தில் விளையும் ஓர் உணர்வுநிலை. ஒரு சீடன் 'தன்முனைப்பு' என்பது, ஆத்மா என்னும் எல்லையற்ற சமுத்திரத்தில் எழும் ஒரு மிகச் சிறிய அலை என்பதை உணரும்போது அவன் வேண்டுமென்றே தன் கவனத்தை இந்த ஆன்மிக மஹா சமுத்திரத்தினின்றும் திருப்பி தனது குருவடிவில் உள்ள பரம்பொருளுடன் ஒன்றிட முயல்கின்றான். ஆசானிடம் பூர்ண சரணாகதி செய்வது நமது இறுதி இலக்கினை அடைய மிகத் தேவையான படிக்கல். அதுவே ஆத்ம சாட்சாத்காரத்தினை அடைவதாகும்.*

*அன்பு:*

*"'அன்பு' என்பது ஒருவருக்கு ஒருவரிடையே எழும் இடையறாத ஈர்ப்பு. இது ஒவ்வொரு அணுக்களுக்கும் இடையே நிகழ்கிறது. இதுவே அண்டத்தினை மூடும் பௌதிகத் திரையின் உருவம். ப்ரக்ஞை உணர்வின் வெவ்வேறு வடிவங்களில் இது வெளிப்படுகிறது" என்று ஒரு அறிஞர் விளக்கியுள்ளார்.*

*இந்த விளக்கம் சார்பியல் சார்ந்து அமைந்துள்ளது. இதில் ஒருவேளை சிறிது உண்மை இருக்கலாம். அனுபவ நோக்கிலே பார்க்குமிடத்து 'அன்பு' என்பது மட்டுமே கட்டுக்குட்பட்ட நமது சார்புகளிடம் இருந்து கட்டற்ற பேருண்மைக்கு நம்மை அழைத்துச் செல்லும் உதவிக்கரமாக அமைகிறது.*

*மெய்ம்மைக்கு எடுத்துச் செல்லும் கடினமான பாதையில், நமது குறிக்கோள் எவ்வளவு உயர்ந்து, சிறந்ததாக இருப்பினும் இது தொடர்பான நமது கருத்தாக்கம் குறைபாடாகவே அமைந்து இறுதியில் மறைந்து போகிறது.*

*வாழ்க்கை எனும் மாக்கடலில் இக் கருத்தாக்கங்கள் முற்றிலும் கரைந்து போகின்றன. ஆத்ம சாட்சாத்காரம்*

அடையத் தீவிரமாக முயலும் சாதகன், இடையறாது தாண்ட உதவும் 'அன்பு' எனும் உந்து சக்தியை எந்த அளவில், எப்போது அவன் நாட வேண்டும் என்பதை அறிவான். மறைபொருள் நூல்களில் இதைக் குறித்து ஏராளமான சான்றுகள் உள்ளன. புனிதர் பால் இது குறித்துக் கூறுகிறார்:

"எனக்கு எதிர்காலத்தை உய்த்துணரும் வரம் உள்ளது. என்னால் எல்லா மறைபொருளையும் உய்த்துணர முடியும். எனக்கு எல்லாத் துறைகளிலும் அறியும் ஆற்றல் உள்ளது. எனக்கு திட நம்பிக்கை உள்ளது. என்னால் மலைகளையும் பெயர்த்து எடுக்க முடியும். இவை அனைத்தும் எனக்கு இருந்தாலும் தயை என்னும் குணம் இல்லாவிடில், நான் ஒன்றுமே இல்லை."

மெய்ம்மையை குறித்து தியானித்தலே நமக்கு உதவும் திறன் படைத்தது. நாம் காட்டும் மிக உயர்ந்த நிலை அன்பானது நமது குருநாதன்மீது நாம் காட்டும் அன்பே. குருநாதர்மீது அன்பு காட்டாத சீடன் என்று ஒருவன் இருந்தால் (அப்படி ஒருவன் இருப்பானேயாகில்) அவனிடம் சத்குரு வரமாட்டார். சாளரங்களே இல்லாத அறையில் ஒளிக்கதிர் பரவ முடியாது என்பது போன்றது இது. அன்பு படைத்திராத ஒரு சீடனை எதுவுமே காப்பாற்ற முடியாது. அவன் உய்வு எய்த வேண்டுமெனில், அவனுக்கு ஓர் உயிரோட்டமான வாழும் உதாரண புருஷர் வழிகாட்டத் தேவைப்படுகிறார். அந்தக் குருநாதர் எல்லா ஐயங்களையும் குறைபாடுகளையும் கடந்த மாபெரும் வியக்தி என்று அறிந்து சீடன் சரணடைய வேண்டும்.

**ஸத்குரு:**

வழிகாட்டும் ஸத்குரு இல்லாவிடில் வழியும் இல்லை என்பதை நீ அறிவாய் என்று கூறுகிறாய். பகவானின் திருவடிகளில் சரணடைந்துள்ள என்னை

நோக்கி, "எப்படி உன்னால் இவரது சந்நிதியில் பேருண்மையை அறிய முடியும்" என விழைகிறாய். உன்னால் இங்கே வரமுடிந்து பகவானின் கட்டிலுக்கு நிழல்தரும் மூங்கில் கூரைக்கு அடியில் அமர முடியும் எனில் உன் கேள்விக்கு விடை ஒன்றும் தேவைப்படாது. நீ அருணாசலத்தின் புகைப்படங்களைக் கண்டு இருக்கலாம். எனினும் இப்படங்களைக் காண்பது, இவ்வருள் மலையின்மீது நீ ஏறி, அதன் அருள் விலாசத்தை நேரில் காண்பதற்கு ஒப்பாகாது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். மஹரிஷியின் சந்நிதியில் அவரது அருட்கதிர் வீச்சில் அமர்திருப்பது ஆன்மிக அனுபவம். என்னுடைய நாட்குறிப்பில் அது குறித்து சில சொந்த அனுபவங்களை நீ காணலாம்.

**மனதினை அடக்குதல்:**

என்னிடம் சரணடைந்தால் உன்னுடைய

மனமயக்கம் என்னால் அழிவுறும்

- *Maharshi's Gospel*

பகவானின் இந்த வரிகள் உன்னுடைய கேள்விகட்கு விடையாக அமையும். நான் ஒவ்வொருமுறையும் பகவானைக் குறித்து ஆழ்ந்து தியானிக்கும்போது வேறு எந்த தேவையற்ற எண்ணங்களும் என் மனதில் நுழைவதில்லை என்பதை நான் அனுபவத்தில் கண்டுள்ளேன். என்னுடைய ப்ரக்ஞை உணர்வில் எந்த ஒரு பயனற்ற அல்லது தீய எண்ணங்களுக்கோ இடமே இல்லை. ஆத்ம விசாரணையில் இடையறாது ஈடுபடுவதன்மூலம் இதுகாறும் மனதில் குடிகொண்டிருந்த அலைபாயும் பயனற்ற எண்ணங்கள் நீக்கப்பட்டு அங்கே அசைவுறாத பேரமைதி ஆசனமிட்டு அமர்ந்துள்ளது. ஆத்ம விசாரம் முழுமையடைய இது மட்டுமே போதாது.

*ஒரு முழுமையான சுத்த மௌனம் அல்லது பேரமைதி, இதற்கு முக்கியமான தேவை. நீண்ட அமைதியான தியான சாதனை மற்றும் எங்கிருந்து எண்ணங்கள் எழுகின்றன என்ற விசாரணை எனக்கு இதனை அறிய பேருதவி செய்கின்றது. அப்போது எந்த ஒரு எண்ணமுமே எனக்கு உதவவோ, என்னுடைய எதிர்காலத்தை மாற்றியமைக்கவோ இயலாது என்பதை நான் உணர்ந்தேன். சிந்தனை வயப்பட்டு எண்ணப் போக்கினைத் தொடர்க என்று மனம் கூறுவதால் நாம் ஏமாற்றப்பட்டு தவறான வழிகளில் பயணிக்கும் நம்மிடம் குடிகொண்டு இந்த நுட்பமான பொய்மை வேருடன் கல்லி எடுப்பது மிகக் கடினமான ஒன்று. ஏனெனில் மனத்தைக் கடந்த பிரக்ஞை உணர்வில் நாம் இருந்தாலொழிய நம்மால் எண்ண ஓட்டத்தை தடை செய்ய இயலாது. சமாதி எனப்படும் உயர் ப்ரக்ஞை நிலையினை அடைந்து அநுபவிப்பதே எல்லா சாதகர்களுடைய நோக்கமாகும்.*

*“சமாதி மட்டுமே சத்யத்தை உணரச் செய்யும்”*

*- Maharshi’s Gospel*

*சமாதி:*

*சமாதி எனப்படும் மன எல்லை கடந்த பேரின்ப நிலைகுறித்து சில நூல்களில் விவரிக்கப்படுகிறது. சமாதி நிலைகளும் பல்வேறு விதமாகச் சித்தரிக்கப்படுகின்றன. மஹரிஷியின் சுருக்கமான வார்த்தைகளில் “சமாதி நிலையில் இடையறாத ‘நான்-நான்’ அல்லது ‘நான் இருக்கிறேன்’ என்ற உணர்வு அதிர்ந்து கொண்டே இருக்கும்.”*

*எனினும், இந்த சமாதி நிலையை அடைவதற்கு இத்தகைய விவரணங்கள் எதுவும் உதவப் போவதில்லை. சமாதி நிலையை அனுபவத்தில் எய்தும்போது*

*சாதகன், 'இதுகாறும் சமாதி குறித்து என்னவெல்லாம் எண்ணியிருந்தோம்' என வியப்புறுகிறான்.*

★★★ ★★★

*ஆன்மிக சாதனையில் ஈடுபட்டிருக்கும், உலகின் பல பாகங்களில் வாழும் எனது நண்பர்களின் கேள்விகட்கு விடையான எனது கடிதங்களில் நான் குறிப்பிட்ட விஷயங்களை இங்கே பகிர்ந்து அளித்து உள்ளேன். அவர்களால் இந்தியா சென்று தமது ஆத்மிக யாத்திரையில் மஹரிஷியை சந்திப்பது கடினமாக இருக்கலாம். அவரைச் சூழ்திருக்கும் பிரகாசமும் பேரமைதியும் அவர் அடிக்கடி கூறும் அகண்டாகார ஹ்ருதயம் உண்மையிலே உள்ளது என்பதை எனக்கு உணர்த்துகிறது. எனவே உண்மையில் என்னுடன் இட இடைவெளியில் பல்லாயிரம் கல்தொலைவில் உள்ள எனது நண்பர்கள் உண்மையில் எனக்கு மிக அருகாமையில் உள்ளதை அவர்களுடன் இட அளவையில் இருந்த நெருக்கத்தைக் காட்டிலும் இந்த ஆன்மிக அருகாமை மிகவும் அருகில் உள்ளது.*

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2024

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *அக்டோபர்* | 16 | *புதன்* | *இரவு 7.05* | 17 | *வியாழன்* | *மாலை 5.25* |
| *நவம்பர்* | 15 | *வெள்ளி* | *அதிகாலை 3.53* | 16 | *சனி* | *அதிகாலை 3.40* |
| *டிசம்பர்* | 14 | *சனி* | *மாலை 4.17* | 15 | *ஞாயிறு* | *மாலை 3.13* |

# ரமண புராணம்

## ஆகுரா

### ரமண புராணம் வரிகள் (83 – 90)

*தன்மமொடு பாவம் உறச்சாருங்கால் அவ்வந்தக்*
*கன்மம் நுகர்ந்தேதான் கழிதலாற் தன் மாட்டு*
*உவப்பத் தலைக்கூடி உள்ளிப் பிரிவேன்.* *85*

*தவிப்புத்தீர் வாயிலும் தானேயாய் தன்னைப்*
*பிரிவாதனை பிரியப் பேசும் அறிவாலே*
*பிரியாவிடை நல்கும் பெம்மான் அருள்மொழி இப்*
*பேதையேன் உள்ளத்தில் பேராது இனிது ஒளிர்ந்து*
*பாதியாமத்தும் என் பாசம் அகற்றிடுக.* *(90)*

*அரும்பத விளக்கம்:*

*தன்மம் - தர்மம்,*

*உற - நெருக்கம்,*

*உறச்சாருங்கால் - நெருக்கமாக சார்ந்து இருத்தல்.*

*அவ்வந்த - அவை அவைகளுக்கென உண்டான*

*கன்மம் - கர்மா, கர்மம், வினை ஆற்றுதல்*

*நுகர்தல் - அனுபவித்தல்*

*தன் மாட்டு - தன் பால்*

*உவப்ப - மகிழுமாறு*

*தலைக் கூடல் - ஒன்று கூடுதல், உணர்வால் ஒன்றும் உயர்ந்த கூடல்*

*உள்ளி - எண்ணி*

*தவிப்பு - மனதாலோ அல்லது உடலாலோ அடையும் உணர்வாகும். இது ஏதாவது ஒன்று நடக்கும் என்று எதிர்பார்க்கும் போதோ, ஏதோ ஒன்று நடக்கக்கூடாது என்று ஆவல் கொள்ளும் போதோ தோன்றும் அக்கறை அல்லது அச்சம் எனக் கூறலாம். தவிப்பு வந்து விட்டால் ஏதோ பிரச்சினை என்றும் ஒருவருக்கு பயம், கவலை, நம்பிக்கையின்மை, என்று பல உணர்வுகளை தோற்றுவிக்கும். பயம் என்பது தவிப்பல்ல. தவிப்பினும் மேலோங்கிய உணர்வு பயம், அது மனிதரை மொத்தமாக செயலிழக்கச் செய்யும்.*

*பிரிவாதனை - பிரிவின் வேதனை*

*பிரிவாதனைப் பிரியப் பேசும் அறிவு - பிரிவின் வேதனை போக்கப் பேசும் அறிவு*

*பிரியாவிடை நல்கும் பெம்மான் அருள் மொழி - பிரிவு இன்றி விடைகொடுக்கும் இறைவனின் அருள் மொழி*

*பேராது - பெயராது, இடம் பெயராது*

*பாதியாமத்தும் - தமிழர்கள் ஒரு நாளை சிறு பொழுது என்றும் ஒரு வருடத்தை பெரும்பொழுது எனவும் வகுத்தனர். தற்போதைய 4 மணி நேரம் 1 சிறுபொழுது எனப்படும். அவை: காலை (மணி 6-10) நண்பகல் (10 -2), எற்பாடு (2-6), மாலை (6-10) யாமம் (10-2) வைகறை (2-6), என்பவை. யாமம் என்பது இரவு 10 மணி முதல், இரவு 2 மணி வரை. பாதி யாமம் 12:00 மணி நள்ளிரவு.*

*பாசம் - பந்த பாசம், பற்று, ஜீவனுக்கு உள்ள ஒரே பற்று அகந்தையே*

*பேதை - சூதுவாது அற்றவன்*

*பேதையேன் உள்ளத்தில் பேராது இனிது ஒளிர்ந்து பாதியாமத்தும் என் பாசம் அகற்றிடுக.*

*பேதையேன் உள்ளத்தை விட்டு நீங்காது நடு இரவிலும் இனிது ஒளிர்ந்து ஜீவனுக்கே உண்டாய ஒரே*

*பற்றாகிய அகந்தையை அகற்றி, "நள்ளிருளில் உள் ஒளியாய்", விளங்கிடச் செய்வாயாக.*

***விரிவான விளக்கம்:***

***தன்மமொடு பாவம் உறச்சாருங்கால் அவ்வந்தக்***
***கன்மம் நுகர்ந்தேதான் கழிதலால்***

*தர்மமும் பாவமும் ஒன்று சேர்ந்து சார்ந்து வரும்போது, அந்த அந்தச் செயல்களின் வினைப் பயன்கள் பிறவி எடுத்து அனுபவித்துதான் தீர்க்கப்பட வேண்டும். தர்மம், பாவம் எதைச் செய்தாலும் அதன் கர்ம வினைகள் ஜீவனை பிறப்பு இறப்பு சுழற்சியில் தள்ளி விடும்.*

*தர்மம் என்றாலும், பாவம் என்றாலும் அவை நான் செய்கிறேன் என்ற வினைகளே. நான் செய்கிறேன் என்றால் அது அகந்தையே.*

*அதாவது doership. இந்த மனோபாவமே கர்மா. இதைத் தீர்க்கக் குறுக்குவழிகள் ஏதும் இல்லை. ஞானியோ, ஜீவனோ இதை அனுபவித்துத் தான் தீர்க்க முடியும். பகவான்*

***"வினையின் விளைவு விளிவுற்று வித்தாய்***
***வினைக்கடல் வீழ்த்திடும் உந்தீபற***
***வீடு தரல் இல்லை உந்தீபற"***

***என்று உபதேச உந்தியாரில் கூறுகிறார்.***

***தன் மாட்டு உவப்பத் தலைக்கூடி***
***உள்ளிப் பிரிவேன் தவிப்புத் தீர் வாயிலும் தானேயாய்***

*அதன்படி கர்மம் ஒழிந்தபின், ஆத்மாவாகிய தன்பால் மகிழ்வுடன் ஜீவன் ஒன்று கூடுவேன் என்கிறான்.*

*இதில் 'நான் கூடுவேன்' என்ற அகந்தை தொக்கி நின்று, மகிழ்வின் எண்ணம் உதிக்கிறது. எண்ணம் எழுவதால் ஜீவன் ஆன்மாவைப் பிரிதல் நிகழுகிறது.*

*இதனால் பிரிவின் தவிப்பு பக்குவியான ஜீவனுக்கு மிகுகிறது. இந்தத் தவிப்பைப் போக்கும் திறவுகோலும் தானே ஆகும்.*

*“தானே தானே தத்துவம், இதனைத்*
*தானே காட்டுவாய் அருணாசலா”*

*‘அருணாசல அக்ஷரமணமாலை’ யில் இது பகவான் ரமணரின் அருள்மொழி.*

*தன்னைப் பிரிவாதனை பிரியப் பேசும் அறிவாலே*

*தன்னை அதாவது, ஆன்மாவைப் பிரிந்த வேதனை*

*விலகப் பேசும் அறிவு - அதாவது உணர்த்தும் அறிவு*

*தன்னை பிரிவாதனை பிரியப் பேசும் அறிவாலே*
*பிரியாவிடை நல்கும் பெம்மான் அருள்மொழி*

*தன்னை ஆன்மாவைப் பிரிந்த வேதனை விலகும் வண்ணம் பேசி உணர்த்தும் அறிவால் பிரிதல் அற்ற விடை கொடுப்பவன் இறைவன். அந்த இறைவனின் அருள்மொழி, என்னவென்றால் “பிரிதல் என்பது உண்மை அல்ல” என்பதாகும்.*

*பிரியாவிடை நல்கும் பெம்மான் அருள்மொழி*

*இப் பேதையேன் உள்ளத்தில் பேராது இனிது ஒளிர்ந்து பாதியாமத்தும் என் பாசம் அகற்றிடுக.*

*ஜீவன் ‘உடல் நான்’ என்று பாவிப்பவன். ஜீவன் அஞ்ஞானம் என்னும் அகந்தை இருளில் உழலும் பேதை. இந்த அகந்தை இருள் என்பது ஒரு மாயையே. ஆன்மாவினின்று பிரிதல் எனும் நிகழ்வு ஒரு பொய்யானது. பிரிதல் கூடுதல் என்பது மாயையே. இரண்டற்ற நிலையில் இருக்கும் ஆன்மாவில் இருந்து இரண்டாக பிரிதல் எங்ஙனம். இது ஒரு மாய*

விளையாட்டு. உண்மை அல்ல என்பதே இறைவன் ஜீவனுக்கு அருளும் அருள் மொழியாகும்

இந்த அருள் மொழியானது ஜீவனாகிய எந்தன் உள்ளத்தில் இருள் சூழ்ந்த நள்ளிரவிலும் இனிய ஒளியாக அகலாது இருந்து ஒளிர்ந்து எனது அகந்தை இருளை நீக்கட்டும். ஜீவனால் அகந்தை இருளை நீக்க முடியாது. ஜீவன் ஒரு மாயத் தோற்றம். பொய்த்தோற்றத்தை பொய்த்தோற்றமே எப்படி அழிக்க முடியும். பொய்த்தோற்றத்தைக் கொடுத்தது ஆன்மாவே. ஆன்மாவே அதை அழித்தால் ஒழிய தானே அழியாது. ஆன்மா குருவடிவில் வந்து பக்குவமான சீடனைத் தேர்ந்தெடுத்து ஆட்கொள்ளும். புலிதான் இரையைத் தேடி தன் வாயில் கவ்வி உட்கொள்ளும். இரை புலியின் வாயை தானாக சென்று அடைவது கிடையாது.

இனிது ஒளிர்ந்து பாதி யாமத்தும் பாசம் அகற்றுதல்

என்பது சிவபுராணத்தில், "நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே... அல்லல் பிறவி அறுப்பானே" என்பதாக வருகிறது குறிப்பிடத்தக்கது. பார்க்கப் போனால் இருள் எது ஒளி எது? பின்னர் வரும் ரமண புராண வரிகளில் "இருளே ஒளியே இரண்டும் அலாத பொருளே", என்று வருகிறது. சிவபுராணத்தில் "ஜோதியனே, துன் இருளே" என்றும் வருவதும் குறிப்பிடத்தக்கது.

கூடுதல் தகவல்:

முருகனாருக்கு திருக்குறள் என்றால் அலாதியான பிரியம் உண்டு. அதன் விளைவுதானோ என்னவோ இந்தக் குறளின் தாக்கம் ரமண புராணத்தில் இடம் பெற்றுள்ளது?

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். (குறள் 394)

மகிழும் படியாகக் கூடிபழகி (இனி இவரை எப்போது காண்போம் என்று) வருந்தி நினைக்கும் படியாகப் பிரிதல் புலவரின், கற்றோரின் தொழிலாகும்.

**பிரியாவிடை அம்மன்; இணைபிரியாத மீனாட்சி:**

ஒவ்வொரு வருடமும் மீனாட்சி திருக்கல்யாணம் நடக்கும்போது கூடவே பிரியாவிடை என்ற அம்மனும் வலம் வருவார். அந்த அம்மன் சுந்தரேஸ்வரரை விட்டு ஒரு கணமும் பிரியாத அம்மன் அதனால்தான் இந்த அம்மனுக்கு பெயர் பிரியாவிடை என்ற பெயர் வந்தது. மீனாட்சி அம்மனுக்கு பட்டத்தரசியாக மக்களை காக்கும் பொறுப்பு நிறைய இருக்கு. அதே நேரத்தில் தன்னுடைய கணவரையும் பாதுகாக்கணும் இல்லையா? கணவனின் மீது கொண்ட அன்பு காரணமாகத்தான் பிரியாவிடை அன்னையாக காட்சி தருகிறாள் மீனாட்சி. ஆட்சியையும் மக்களையும் கவனிக்கும் தன்னால் கணவனை கவனிக்க முடியாமல் போய் விடுமோ என்ற கவலை மீனாட்சி அம்மனுக்கு வந்திருக்கிறது அதனால்தான் பிரியாவிடை உருவத்தில் சொக்கநாதருடன் கூடவே உற்சவ அன்னையாக பிரியாவிடை நாயகியாக வலம் வருகிறார் என்பதுதான் சிறப்பு.

**திருவண்ணாமலை திருவூடல் திருவிழா ஒரு தத்துவம்:**

பிரம்மன் (புத்தி), மாலவன் (முயற்சி) இருவரும் தங்களில் யார் பெரியவர் என்று அகங்கரித்து எழும்போது ஜோதி உருவாய் எல்லை அற்ற ஆன்மா எழுந்து, தனது முடியையோ அல்லது அடியையோ காண்பவர் யாரோ அவரே பெரியவர் என்று தீர்ப்பு அளிப்பதாக வரலாறு. ஆனால் எல்லையற்ற ஆன்ம ஜோதிக்கு அடிஎது, முடி ஏது? இருவரும் அடிமுடி காண முடியாது நிலைகுலைந்து சரண் அடைந்து நிற்கையில் ஆன்மா காட்சி அளிக்கிறது. ஆக அகந்தை

*ஒடுங்குதல் ஆன்மா விளங்குதல் என்பதே அருணாசல தத்துவம் "சக்தி ஒடுங்கிட ஓங்கும் அருணாசலம்", என்பது பகவான் ரமணர் அருணாசல ஸ்துதி பஞ்சகத்தில் அருளிய வாக்கு. சக்தி என்னும் அகந்தை ஆன்மாவாகிய அருணாசலத்தில் ஒன்று சேர்ந்த தத்துவமே இது. இங்கு அருணாசலேஸ்வரர் உண்ணாமுலை உமையாளொடு ஒன்று சேர்ந்து உமை ஒரு பாகனாய் உள்ளார்.*

*திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் பொங்கலுக்கு அடுத்த நாள் திருவூடல் திருவிழா கொண்டாடப்படுவது வழக்கம். இந்த நிகழ்ச்சிக்கு ஒரு வரலாற்று கதை கூறப்படுகிறது. சிவனடியாரான பிருங்கி முனிவர் சிவபெருமானை மட்டும் வலம் வந்து வணங்கி வருவார். ஆனால் சிவன் அருணாசலத்தில் உமை ஒருபாகமாக உள்ளவர். இங்கு எப்படி சிவபெருமானை மட்டும் வலம் வர முடியும். எனவே ஒரு வண்டின் உருக்கொண்டு பெருமானின் உடலைத் துளைத்து கொண்டு உமா தேவியின் பாகத்தை தவிர்த்து வலம் வந்து விடுகிறார். அவருக்கு சிவன் முக்தியும் அளித்து விடுகிறார். இதனால் ஊடல் கொண்ட தேவி பிரிதல் இல்லாத நிலையில் பிரிவாதனை உண்டாக்கப் பட்டதற்கும் அதனை அங்கீகரித்த சிவன் மீதும் பிணக்கு கொள்கிறார். பின்னர் சிவபெருமான் அமைதிப்படுத்த ஊடல் முடிவுக்கு வந்து மீண்டும் ஒன்று சேர்தல் நடக்கிறது. இந்த ஊடல் மற்றும் கூடலை விளக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் திருவூடல் திருவிழா கொண்டாடப்படுகிறது.*

***பிரிவு:***

*பிரிவு என்றால் என்ன? பிரிவு என்பது ஒரு மாயை. நாம் உலகத்தில் எத்தனையோ பிரிவுகளைப் பார்க்கிறோம். உலகம், கண்டங்கள், நாடுகள், நாடுகளில் பிரிவினைகள், மொழி வகையில், சமூக ரீதியாக மதங்கள், வர்ணங்கள், உயிரினங்களில்*

*மனிதன், விலங்குகள் மற்றும் உள்ள தாவரங்கள், புழுக்கள், மனிதர்களில் ஆண், பெண், அலி என்பதாகக் கூறிக்கொண்டே போகலாம். இந்த பிரிவுகளில் சில பிரிவுகளை அடைக்க சமூக தீர்வுகள் கொண்டுவர முயற்சி மேற்கொள்ளப்பட்டு தோல்வியில் முடிகிறது. இது எவ்வாறு அடைக்கப்பட வேண்டும்.*


*இதற்கு இந்திய ஆன்மிகம் ஞானிகளின் மூலம் தீர்வு கொடுக்கிறது. பிளவு, பிரிவு வெளியே இல்லை அது ஜீவனின் உள்ளே உள்ளது. ஜீவன் என்பவன் தன் உடலை நான் என்று எண்ணுகிறான். பிறவுடலை நான் என்று கூறுவதில்லை. ஆனால் ஆன்மாவே ஏகமாக எல்லா இடத்திலும் எல்லையற்று நிலவி நிற்கிறது. அதற்கு அன்னியமாக எதுவும் இன்றி இரண்டற்று உள்ளது. எனவே அதற்கு போகவும் வரவும் ஒரு அன்னிய புள்ளி இல்லை. எனவே அது போக்கும் வரவும் அற்ற புண்ணியன். அசலமாக அகண்ட பரிபூரணமாக உள்ளது. இங்கு பிரிவு இல்லை. இதுவே சனாதனம். ஞானி ஞானமாக உள்ள நிலை. அஞ்ஞானிக்கு அவன் உடல் தான் நான். ஞானத்திற்கு எல்லாமே நான். பிரிவற்ற இந்நிலையில் அகந்தை என்பதாக ஒரு நான் பொய்யாக உதிக்கிறது. இதுதான் முதல் பிளவு. இந்த பொய்யாகிய நான் உடல் கொண்டே உதிக்கிறது. இங்குதான் அடிப்படையான பிரிவு தோன்றுகிறது. ஒரு கயிறு பாம்புபோல் பொய்த்தோற்றம் கொடுப்பது போல, ஆன்மா அகந்தையாகிய பொய் நானை தோற்றுவிக்கிறது. இது ஒரு தோற்றமே. எல்லா தோற்றங்களும் மறைவுக்கு இடம் அளிப்பன. தோன்றி மறையக் கூடிய அனைத்தும் மாயை. பாம்பின் தோற்றம், அதனைத் தோற்றுவிக்கப்பட்ட கயிற்றில் மறைவதுபோல், அகந்தையாகிய நான் அதனைத் தோற்றுவித்த ஆன்மாவில் ஒடுங்கும். அப்படி ஒடுங்காது போனால் ஆட்டம் காட்டும், பல உயிர்*

*தோற்றங்களாக, பிறப்பு இறப்பு சுழலில் சுழலும். ஜனனம் மரணம் பிறகும் ஜனனம்.*

*அகந்தை ஆன்மாவில் ஒடுங்குதல், தன்மயமாதல் என்கிறோம். இந்த பிளவு அடைக்கப்பட்டவுடன் எங்கும் ஒரே நான் தான். வெளியில் இதுவரை ஜீவன் கண்டு வந்த அனைத்து பிரிவுகளும் மறைந்துவிடும். அகந்தை அழிந்தால் ஆன்மா ஒன்றே ஒளிரும். அகந்தை அழிதல், இதுவே உள்நோக்கியப் பயணம். வெளியில் தோன்றும் அனைத்து விகாரங்களையும் சரிசெய்ய வெளி விஷயங்களில் விவகாரம் செய்யாது நம் உள்ளே தோன்றிய பிரிவை அடைத்தலே உள்ளே பயணப்படுதல். அகந்தை என்பது நான் உடல் என்னும் பொய் அபிமானம், எனது என்னும் பொய்யான அனுமானம், நான் செய்கிறேன் என்னும் பொய்யான பாவம். பக்குவம் அடைந்த ஜீவன் தன் முயற்சி மற்றும் அறிவு கொண்டு இதனை அழிக்க முயல்கிறான். இந்த முயற்சியின் முடிவு தோல்வியில் முடியும் போது இறையாகிய ஆன்மாவின் அருள் ஆட்கொண்டு அகந்தை அழிந்து ஒன்றாதல் கூடுகிறது. பின் பிளவு, எங்கும் இல்லை. எல்லாம் ஒன்றே.*

*இந்த பிரிதல் கூடுதல் என்னும் ஒரு மாயா நிகழ்வு இங்கு “உவப்பத் தலைக்கூடி உள்ளிப் பிரிதல், தவிப்புத் தீர் வாயிலும் தானேயாய், தன்னை பிரிவாதனை பிரியப் பேசும் அறிவாலே பிரியாவிடை நல்கும் பெம்மான் அருள்மொழி, இப் பேதையேன் உள்ளத்தில் பேராது இனிது ஒளிர்ந்து பாதியாமத்தும் என்பாசம் அகற்றிடுக” என்று பேசப்படுகிறது.*

*.....தொடர்ந்து காண்போம்*



## அனுபூதியருள்

*"அநுபூதி வெண்பா" எனும் தலைப்பில் முருகனார் இயற்றிய பாடல் தொகுப்பும் இராமநாத பிரம்மச்சாரி இயற்றிய "ரமண ஸ்தோத்ராநுபூதி" பாடல்களையும் ரமண அன்பர்கள் நன்கறிவர். திருஞான சம்பந்தப் பெருமான் அருளிய உண்ணாமுலை உமையாளொடு எனும் சந்தத்தைத் தழுவி, ஸத்யநாராயணன் எனும் அன்பர் "அனுபூதியருள்" எனும் இப்பாடல்கள்களை எழுதியுள்ளார். பகவானின் அநுபூதி எனும் அமுதத்தை எத்தனை முறை எத்தனை வகை சுவைத்தாலும் ஆனந்தமே!*

# அனுபூதியருள்

**ஸத்ய நாராயணன்**

*பெண்ணாளெழிற் பிறவாவரம் பெறவோசுழி சனனம்*
*கண்ணாலதை யடியார்பெற கதிநல்கிடு கழலே*
*எண்ணாமன மருள்வாள்முனை யெழுமாணவ மரியு*
*மண்ணாமலை ரமணாவுன தனுபூதியை யருளே. (1)*

*பொருள்: எழிலே வடிவான பெண்ணாகிய அழகம்மாள், நின் தாய், விதேக கைவைல்யம் பெற்று பிறவாவரம் பெறவோ நிகழ்ந்தது திருச்சுழியில் நின் சனனம்? உம்கண்ணால் அதே வரத்தை உமது அடியார் பெற கதி நல்கிடும் கழலுடையவனே.. உம்மிடத்தே எண்ணங்கள் இறந்த மனமுண்டு. அதன் அருள் வாள் முனையால் அடியாரிடம் எழும் ஆணவத்தை அரியும் அண்ணாமலை ரமணா, நினது அனுபூதி நிலையை எமக்கு அருள்வாய்.*

*ஊனோர்வர முலகேபர மெனுமோகம தொழிய*
*வூனோநிச முலகோபரம் நானாரென வினவிக்*
*கூனார்மதி தலைசூடிடு குரவோனழை குருவா*
*யானாயிறை ரமணாவுன தனுபூதியை யருளே. (2)*

*பொருள்: இந்த ஊனாகிய உடல் ஒரு வரம், இந்த உலகே பரம் என்னும் மோகம் ஒழிய, இந்த உடலோ நிசம்? உலகோ பரம்? இதைக்கேட்கும் இந்த நானார் என்று வினவி, வளைந்த மதியைத் தலையில் சூடிடு குருவான சிவனார் உன்னை திருவண்ணாமலைக்கு அழைத்து ஈர்க்க, எமக்கெல்லாம் குருவாக, ஆனாயே, இறையே ரமணா, நினது அனுபூதி நிலையை எமக்கு அருள்வாய்.*

*காலன்வரு திதியோபுதிர் கடுகேனும துணரா*
*காலம்நடு மதிலோடுறை கனவூறலும் முடிய*
*காலன்வரை முடிவேதென விடைதேடிடு கதிரே*
*ஆலங்களை ரமணாவுன தனுபூதியை யருளே. (3)*

*பொருள்: யமன் வரும் நாளோ புதிர். அதைக் கடுகளவும் எண்ணாது, காலம் நட்டு வைத்த மதிலோடு அதனுள் உறைகின்ற கனவில் எமது ஊறல் முடிய, அதே யமன் வரையும் அந்த இறப்பு என்னவென்று விடைதேடி கண்ட கதிரொளியே, ஆலகால விஷம் போன்ற ஆணவத்தை விட்டுவிட்ட ரமணா, நினது அனுபூதி நிலையை எமக்கு அருள்வாய்.*

*அலையும்மன மதில்வேர்விடு பலவாசைக ளவையால்*
*தொலையும்வெகு சனனங்களி லுழல்வேன்துனி துமிய*
*மலைதன்வலை வசியம்பிடி மதுரைம்பதி மகவே*
*அலைனின்றிட ரமணாவுன தனுபூதியை யருளே. (4)*

*பொருள்: அலைகின்ற மனத்தில் வேர் விடும் பலவாசைகள் எழவும், அவற்றின் உந்துதலால், அதனால் பல சன்மங்கள் எடுத்துத் தொலைந்து அதில் உழல்வேன் யான், எனது துன்பம் அழிய, மலையொன்றின் வலையில் அகப்பட்டு அதன் வசியம் பிடித்து வைத்த மதுரையம்பதியின் மகனே என் மனத்து அலைகள் நின்றிட (அதனால் பிறாவாதிருந்திட) ரமணா, நினது அனுபூதி நிலையை எமக்கு அருள்வாய்.*

*புறமேவுறு துயர்தீண்டிடு புதையாழியி லமிழ்வேன்*
*முறையோயிது மறையேயிதன் முடிவேதுரை பிலமே*
*கறையான்புழு தொடைகீறவு மசையாதொளிர் கனலே*
*அறிவாயுணர் ரமணாவுன தனுபூதியை யருளே. (5)*

*பொருள்: நம்மைவிட்டுப் புறத்தேவுறும் துயரங்கள் தீண்டும் புதை கடலிதில் அமிழ்வேன். இதுதான் முறையோ? மறைவடிவே, இதன் முடிவுதான் ஏது, உரைப்பாய். குகை போன்ற பாதளத்தில், கறையானும் புழுக்களும் தொடையில் ஊறிய பொழுதும் அசையாது ஒளிர் கனலே அந்த உண்மை அறிவாய் உணர்வு நிலையில் நின்ற ரமணா, நினது அனுபூதி நிலையை எமக்கு அருள்வாய்.*

# ஸ்ரீ ரமணாஸ்ரம நூற்றாண்டு நிறைவு விழா – செய்தித் தொகுப்பு

**குமார் ராஜா**

*பல்லாண்டு பல்லாண்டு பல கோடி நூறாயிரம் வாழ*
*ஸ்ரீ ரமணாஸ்ரம நூற்றாண்டு விழா சென்னை வைபவம்*

*நூறு ஆண்டுகள் வாழ்க என்று வாழ்த்துவது உலக வழக்கு. நூறு ஆண்டுகள் என்பதை ஒரு பெருமைமிக்க மைல் கல் எனலாம். மகான் ஸ்ரீ ரமண மகரிஷிகள் ஆஸ்ரமம் என்னும் போது அது காலத்திற்கு அப்பாற்பட்ட ஒரு நிறுவனம். 2022 ஆம் ஆண்டில் அத்தகைய ஒரு நிகழ்வை எட்டிய ஸ்ரீ ரமணாஸ்ரமம் இந்த ஒரு நூற்றாண்டு வைபவத்தை உலகெங்கும் உள்ள அன்பர்களின் மனம் மகிழும் வண்ணம் கொண்டாடத் துவங்கியது. பல்வேறு நகரங்களில் கொண்டாடி சென்னை மாநகரை அடையவே இரண்டாண்டுகள் உருண்டு ஓடிவிட்டது.*

*இறுதியாகச் சென்னை நகரில் 17 ஆகஸ்டு 2024 ஆம் ஆண்டு காலை முதல் மதியம் வரை, சென்னை சேத்துப்பட்டு குசலாம்பாள் திருமண மண்டபத்தில் ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் நூற்றாண்டு விழா விமரிசையாக, ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரமண அன்பர்கள் உற்சாகமாகக் கலந்து கொள்ள கொண்டாடப்பட்டது.*

*முதலில் ரமண அன்பர்களுக்குத்தான் நன்றி கூறவேண்டும். அவர்கள் அனைவரும் ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் வலைத்தளம், முகநூல் மற்றும் சென்னை மையத்தின் whatsapp. SMS தகவல்களின் மூலம் பெறப்பட்ட ஆஸ்ரமத்தின் அழைப்பை ஏற்று, அன்றைய பல போக்குவரத்து இன்னல்களைப் பொருட்படுத்தாது, ஆயிரக் கணக்கில் பங்கு கொண்டது பாராட்டத்தக்கது. இது சென்னையின் ரமண வரலாற்றில் முதன் முதலாக ஸ்ரீ ரமணாஸ்ரமம் சார்பில் கொண்டாடப்படும் நிகழ்வு என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.*

*இந்த நேரத்தில் ஸ்ரீ முருகனாரை நினைவு கொள்ள வேண்டும். அவர் அன்றே ஸ்ரீ ரமண சந்நிதிமுறையில்*

*சென்னை ஸ்ரீ ரமணாஸ்ரமம் என்று ஒரு குறிப்பை கொடுத்துள்ளார். ஸ்ரீ ரமணாஸ்ரமம் இன்று சென்னை வந்துள்ளது எனலாம்.*

*முதலில் குத்துவிளக்கு ஏற்றி இறை வணக்கத்துடன் விழா துவங்கியது/ஆஸ்ரமத்தின் ராஜ மாதாவாகிய திருமதி சுசிலா அம்மாள் அக்ஷரமணமாலை பாராயணத்தைக் குரல் கொடுத்துத் துவக்க, ஆயிரம் குரல்கள் ஒருசேர அவருடன் கூடி அருணாசல துதியில் பங்கு கொண்டன.*

*பாராயணத்தில் திரு இசைஞானி இளையராஜா அவர்களும், ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் தலைவர் திரு வேங்கட் சு ரமணன், அறங்காவலர்கள், மற்றும் சென்னை ரமண மையங்களின் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். பாராயணம் முடிந்தவுடன், ஸ்ரீ ரமணாஸ்ரம அறங்காவலர் திரு கிருஷ்ணன் வரவேற்பு நல்கினார்.*

*1922 ஆம் ஆண்டு பகவான் அண்ணாமலை குகை வாசம் விட்டு அன்னை அழகம்மை சமாதி வைபவம் நடந்த சில நாட்களில் அன்னையின் சமாதி திருக்கோயில் அருகில் வசிக்கத் துவங்கினார். அன்றே ஸ்ரீ ரமணாஸ்ரமம் துவங்கிய நாள். 2022ஆம் ஆண்டு இவ்வைபவம் துவங்கி நூறு ஆண்டுகள் ஆகின்றது. இந்த நூற்றாண்டு வைபவத்தை இந்தியா, இலங்கை மற்றும் அமெரிக்கா போன்ற உலக நாடுகளில் ரமண விழா கொண்டாடப்பட்டு முடியும் போது இரண்டாண்டுகள் உருண்டு ஓடிவிட்டது. இதில் சென்னை நமது வீடு, வீட்டின் விருந்தாளிகள் விருந்து உண்ட பின்னர், வீட்டினர் உண்பது போல் இறுதியாக இங்கு இன்று கொண்டாடப்படுகிறது.*

*திரு. கிருஷ்ணன் அவர்கள் இப்படியாக வரவேற்புரை ஆற்றினார். இவரே விழா தொகுப்பாளராக இருந்தது குறிப்பிடத்தக்கது.*

*இதன் பின்னர் நமது ஸ்ரீ ரமணாஸ்ரமம் தலைவர் திரு வேங்கட். சு. ரமணன் அவர்கள் விழாவின் சிறப்பு அம்சங்களைக் கூறி உணர்ச்சிமிகு உரையாற்றினார். இவரின் ஆங்கில உரையின் தமிழ் ஆக்கம் முழுவதும் தனி கட்டுரையாக இந்த இதழில் சேர்த்துள்ளோம். அதனை வாசித்து மகிழுங்கள்.*

*அதன் பின்னர் விழாவின் சிறப்பு விருந்தினராக வந்திருந்த இசைஞானி இளையராஜா அவர்கள் ஆத்மார்த்தமாக அவரது ரமண அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். "செப்பத் தரமில் சிறியேன், சிவரமணன் மெய்ப்பரிசு விள்வேன் அம்மிக்கோன் வியன் அருளால்" என்பது ரமண புராணத்தில் முருகனாரின் வாக்குமூலம். அதனை ஒட்டியதாகத்தான் ரமண அன்பர் இளையராஜா அவர்கள் அவரது சிறப்பு உரையைத் துவக்கினார். அவரது சிறப்பு ரமணானுபவ பகிர்தலை ஓரளவு சுருக்கமாகக் கொடுக்கிறோம்.*

*"ரமணரைப் பற்றிக் கூற வேண்டுமானால் நாம் அவர் நிலைக்கு மேலான நிலையில் இருந்தால் மட்டுமே முடியும். அவரைப் பற்றிக் கூற இவ்வுலகில் யார் உள்ளார். அவரை நம்மால் அறிய முடியாது. ஆனால் அவர் நம்மை அறிவார். அதனால்தான் திரளாக இவ்வளவு பேர் கூடியுள்ளோம். எனக்கு இசை ஓரளவுக்குத்தான் தெரியும் ஆனால் இசைக்கு என்னை நன்றாகத் தெரியும். பகவான் 16 வயதில் உடலை புழுக்கள் தின்று கொண்டு இருக்க உடல் என்னும் உணர்வு இன்றி இருந்தார். அவர் ஏதோ தவத்தில் இருந்து கொண்டு, உடலைப் புழுக்கள் தின்கின்றன, நான் தவத்தில் பொறுத்துக் கொண்டு இருக்கிறேன் என்பதாக இருக்கவில்லை. அவருக்கு உடல் என்ற ஒன்று இருப்பதான உணர்வே இருக்கவே இல்லை. பகவான் பற்றி குஞ்சு ஸ்வாமிகள், அண்ணாமலை ஸ்வாமிகள் போன்றோர் கூறக் கேட்கும்போது இப்படியும் ஒரு ஞானியா என்று வியப்பு மிகும். அவ்வப்போது என்னுள் பகவானைப் பற்றி உண்டான உணர்வுகளை எழுதி வைப்பதுண்டு. அவற்றை ஸ்ரீ ரமணாஸ்ரமத்தினர் புத்தகமாக வெளியிட்டுள்ளனர்."*

*அதனின்று சில பகுதிகளை வாசித்துக் காட்டினார். பின்னர் அவரது பக்தி உணர்வுகளையும், பகவானால் ஈர்க்கப் பட்ட நிகழ்வுகளையும் பகிர்ந்து கொண்டார்.*

*"எனது பக்திப் பயணம் முதலில் தீவிர மூகாம்பிகை பக்தனாகத் தான் துவங்கியது. அதன் முன்னர் சிறுவயதில் என் அண்ணனுடன் பிரசார பாடல்களுக்குக் கம்யூனிச மேடைகளில் ஆர்மோனியம் வாசித்துப் பழக்கம். அன்று கம்யூனிச வாதிகள் முழுதும் பகுத்தறிவு சார்ந்த பிரசாரங்களை மேற்கொள்ளவில்லை. பக்தி உணர்வுகளை*

*எதிர்க்கும் போக்கும் இல்லாதவாறு இருந்தனர். அதனால் அதன் தாக்கம் என்னுள் இருந்தது. இறைவன் உண்டா இல்லையா என்ற அழுத்தம் என்னுள் இருந்து வந்தது.*

*கர்நாடக மாநிலம் மைசூர் பக்கம் இசையமைக்க உதவியாளராகச் சென்றபோது மூகாம்பிகை சன்னிதிக்குச் செல்ல வேண்டி வந்தது. அந்தக் கோவிலில் அடி எடுத்து வைத்த உடனேயே என் இதயத்தில் — என் நெஞ்சில் அல்ல — ஒரு மின்சாரம் பாய்ந்து அது என் உடல் முழுவதும் இறை உணர்வாகப் பரவுவதை உணர்ந்தேன். அதன் பின்னர் சென்னை வந்து என் இசைப் பயணம் துவங்கிய ஆரம்ப நாட்கள் ஒரு வித்தியாசமான சூழலை உருவாக்கியது. என் திறமை ஒரு வியக்கத்தக்க கண்ணோட்டத்தில் பார்க்கப் பட்டது. என்னுள் அன்னை மூகாம்பிகையின் அருள் இசைப் பயணத்தின் உச்சத்தைத் தொட வைத்தது. அதி சாமானிய ஒருவனை இசையில் உன்னதத்திற்கு இட்டுச் செல்ல துவங்கியது.” [இதை அவர் ‘மூகாம்பிகையின் அருளே’ என்று ஆத்மார்த்தமாக கூறியபோது அரங்கம் அதிர்ந்தது.]*

*பக்தி நிலையில் முன்னேறிய அவருக்கு ஒரு குருவின் அவசியம் தேவைப்பட்டது என்கிறார். அன்னை மூகாம்பிகையிடம் எதையும் வேண்டாத இவர் தனக்கு ஒரு ஞான குருவைக் காட்ட வேண்டுகிறார். வீடு திரும்பியவுடன் அவருக்கு ஒரு சிறிய புத்தகம் கண்ணில் படுகிறது. அது பகவானிடம் ஒரு பக்தன் கேட்ட பத்து கேள்விகளும் அதற்கான அவரது விடைகளும். அந்த கேள்விகள் அனைத்தும் இவரது கேள்விகள் போல் அமைந்ததாக உணர்கிறார்.*

*முதல் கேள்வி “மனிதன் தன் அறிவால் அடைந்து அனுபவிக்கத்தக்க உயர் நலன் (இன்பம்) யாது?”*

*இதற்கான பதில் என்ன என்று வாசிக்க எடுத்துக் கொள்ளும் நேரத்தில் “நமக்கு உலகில் ஐம்புலன்கள் கொண்டு அனுபவிக்கத்தக்க இன்பங்கள் ஏராளம், ஆனால் அறிவு கொண்டு அனுபவிக்கத்தக்க என்றல்லவா வருகிறது, என்ற கேள்வி மலைக்க வைத்தது.*

*பகவானின் பதில்: “ஆத்ம ஞானமே. அது அடையத்தக்கதல்ல, புதிதாக நீ எதையாவது அடைவதாக இருந்தால், அடைந்ததை நீ இழக்க வேண்டி வரும். ஆத்ம ஞானம் இங்கே இப்பொழுதே இருக்கிறது.”*

இந்த விடை என் முகத்தில் 'பளார்' என்று ஒரு அறைவிட்டதைப்போல் உணர்ந்தேன்.

பக்தன்: "அப்படியானால் ஒரு கிருகஸ்தன் ஆத்ம ஞானம் அடையமுடியுமா"?

பகவான்: "உன்னை ஏன் கிருகஸ்தன் என்று எண்ணிக் கொள்கிறாய்? நீ வீட்டைத்துறந்து காட்டுக்குப் போனாலும் உன் மனம் வீட்டைத்தான் நினைத்துக் கொண்டிருக்கும். அதைவிட வீட்டில் இருந்து இறைவனை நினைக்கலாமே."

இதை வாசித்தவுடன் இரண்டாவது முறையாக அறை விழுந்ததுபோல் உணர்ந்தேன். என்னில் அனைத்தும் விலகி ஒரு ஆத்மானுபவம் உணர்ந்தேன். இப்படியாகத்தான் பகவான் என்னை இழுத்தாரே ஒழிய, நான் பகவானை நாடி ஒருக்காலும் செல்லவில்லை. இப்படித்தான் எல்லா ரமண அன்பர்களுக்கும் நிகழ்ந்து இருக்கும். "புலி வாயில்பட்ட இரை எப்போதும் தப்பாது, அதேபோல் குரு பார்வையில் பட்ட சீடனை குரு ஒருபோதும் கைவிடார்" என்பது பகவான் வாக்கு. நமக்குப் பகவான் பகவான் தான். அவர் நாமத்தை உச்சரிக்க எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும் உலகில் பெரிய ஒரு அற்புதம் ஒன்று உண்டு என்றால் அது பகவான் மண்ணில் அவதரித்து வாழ்ந்து காட்டியதே."

உணர்ச்சிமிக்க இவர் ஆற்றிய உரை கூடியிருந்த அனைவர் உள்ளத்தையும் சென்று அடைந்து ஒரு சிறந்த ரமணானுபவத்தை வூட்டியது.

இறுதியில் கூடியிருந்த பக்தர்களைத் தனது இசைக் குழுவினருடன் திரு 'சிக்கில்' குருசரண் அவர்கள் ஒரு ரமண இசைக்கடலில் முழ்க வைத்துவிட்டார்.

விழாவின் சிறப்பு அம்சமாக அனைவர்க்கும் தலை வாழை இலையில் ரமண பிரசாதமாக ஸ்ரீ ரமணாஸ்ரமம் சார்பில் சிறப்பு விருந்து பரிமாறப்பட்டது. இப்படி அனைவருக்கும் தலை வாழை இலை இட்டு அமுதூட்ட வேண்டும் என்பதற்காகவே குசலாம்பாள் திருமண மண்டபத்தை ஸ்ரீ ரமணாஸ்ரம தலைவர் மற்றும் அறங்காவலர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். இத்தகைய ஒரு பிரம்மாண்டமான ஒரு ரமண விழா எப்படிச் சாத்தியமாயிற்று. அழைப்பிதழ் என்று பார்த்தோமானால், அதற்கு முகநூல் போன்ற மென்பொருள் ஊடகங்களே பயன்படுத்தப்பட்டன. விளம்பரங்கள் எதுவும்

*செய்யவில்லை. விழா நெருங்க நெருங்க முக்கியமான சில மையங்கள் அவர்களின் பங்கு என்ன என்று மிகவும் பதட்டத்துடன் கேட்க ஆரம்பித்து விட்டனர் .*

*எந்த ஒரு ரமண மையத்திற்கும் பெரிதாக ஒரு பணியும் இல்லை. சென்னையில் அன்றைய தேதியில் போக்குவரத்து சிக்கல்கள் ஏராளம். விழா நடக்கும் அரங்கம் உள்ள இடத்திற்கு முக்கியமான போக்குவரத்து மார்க்கம் ரயில் மார்க்கமே. அது சரியாகச் செயலாற்றவில்லை. பஸ் போக்குவரத்து இல்லை. விழா எப்படி நடக்கும் என்று யாருக்கும் எந்தவித பதட்டமும் இல்லை. போக்குவரத்து ஒரு சவாலான நாளில் சிறிது சிறிதாக அன்பர்கள் வரத்துவங்கினர். விழா துவங்கும் போது அரங்கம் கொள்ளவில்லை. ரமண புராணத்தில் வரும் ஒரு அடி “அன்பர் குடி தாங்கும் ஒரு மொழியால் ஆணை நடாத்தி அனைத்துயிரும் நன்கு ஆள்க” என்பது. அதன்படி ஸ்ரீ ரமணரின் அந்த ஒரு மொழி “சும்மா இரு” என்பதாகும். நாம் சும்மா இருந்தால் எல்லாம் நடக்குமா என்பது ரமணா நண்பர்களிடையே ஒரு பெரிய கேள்விக்குறி உண்டு.*

*ஸ்ரீ ரமணாஸ்ரம தலைவர் திரு வேங்கட் சு ரமணன் அவர்கள் நம்மை பார்க்கும் போதெல்லாம் “நாம் எளிமையாகக் கொண்டாடுவோம், எல்லாம் நன்றாக பகவான் நடத்தி வைப்பார்”, என்று சொல்லிய வண்ணம் இருப்பார். அதுவே உண்மை. இந்த விழா பகவானால் மிகவும் சிறப்பாக அமைத்துக் கொடுக்கப்பட்டது. நன்றி பகவானே. நீ உடல் விடும்போது கூறிய வாக்கு உண்மை “நான் எங்கே போவது.”ஆம் எங்கும் நீயே, போவது எங்கே? எங்களையும் தன்மயம் ஆக்கி ஆண்டுகொள்வாய் சிற்பர சொரூப ஆனந்த மெய்யே பகவானே! வாழி ஸ்ரீ ரமண ஜோதி வள்ளலே வாழி வாழி!*

*குறிப்பு: விழாவின் வண்ணப் புகைப்படங்களை உள் அட்டையில் காண்க. இந்த விழாவின் காணொளியினை ஸ்ரீ ரமணாஸ்ரம YouTube இல் கீழ்க்கண்ட இணைப்பின் வாயிலாக காணலாம்.*
*https://www.youtube.com/live/WVAAMgiEvYM?si=auDT7yyaUu146XN*




# ஸ்ரீரமணாச்ரம செய்திகள்

## அருணை விஜய நாள்

*சுமார் 128 வருடங்களுக்கு முன்பு இதே செப்டம்பர் முதல் நாள், 1896 ஆம் ஆண்டு இளம் துறவியாக, (வேங்கடராமனாக) திருவண்ணாமலைக்கு பகவான் ரமண மகரிஷிகள் வந்தடைந்தார். ஆகஸ்ட் 29 ஆம் நாள் மதுரையில் துவங்கிய பயணம், இரயில், பத்து மைல் நடை, பயணச் செலவுக்காகக் காதுக் கடுக்கனை வைத்து பணம் பெறுதல் என பல இன்னல்களுக்குப் பிறகு, ஞானத் தந்தையாம் அருணாசலேசனை செப்டம்பர் 1ஆம் நாள் அடைந்தார். சின்னஞ்சிறு பாலகனாக 16 வயதினில் அருணையை அடைந்து, இன்று உலகெங்கிலும் உள்ள அன்பர்களை தனது ஞானத்தினாலும் அன்பினாலும் கவர்ந்திழுத்து அருள்புரிந்து வருகின்றார் பகவான் ரமண மகரிஷிகள்.*

*அருணை விஜய நாளை முன்னிட்டு ஒவ்வொரு வருடமும் மதுரையில் இருந்து திரளான அன்பர்கள் ஆச்ரமத்திற்கு வருவது வழக்கம். இவ்வருடமும் மதுரை அன்பர்கள் வந்திருந்தனர். ஆச்ரம அன்பர்கள் மற்றும் மதுரையில் இருந்து வந்திருந்த அன்பர்கள் என அனைவருமாக*



*அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று ‘அருணாசல அக்ஷரமணமாலை’ பாராயணம் செய்து அண்ணாமலையாரை வழிபட்டனர். ஆச்ரமத்தில் சிறப்பு அபிஷேகம் மற்றும் அக்ஷரமணமாலை பாராயணம் நடைபெற்றன.*

*ஆச்ரம தலைவர் வேங்கட் ரமணன் அவர்கள் ஆங்கிலம், தெலுங்கு, குஜராத்தி, மலையாளம் மற்றும் கன்னட ஆச்ரம பதிப்பு நூல்களையும் 2025 ஆம் ஆண்டிற்கான டைரி மற்றும் காலண்டர்களையும் வெளியிட்டார். சென்னை ரமண கேந்திரம் மற்றும் ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கு பாத்தியப்பட்ட குரோம்பேட்டை ரமணாலயத்திலும் அருணை விஜய நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.*

## முருகனார் ஆராதனை

*ஒப்பற்ற தமிழ்ப் புலமை, ஆன்ம ஞான அனுபவம், சிறந்த குருபக்தி, தன்னடக்கம் முதலான தெய்வீகப் பண்புகள் ஒருங்கே அமையப்பெற்ற முருகனார் ஸ்ரீ ரமண பக்தர்களுள் பெரிதும் மதித்துப் போற்றுதற்குரியவர் ஆவார். முருகனார் 28-8-1973 ஆவணி அமாவாசை அன்று ஸ்ரீ பகவான் திருவடிகளில் கலந்தார்.*



*கடந்த 2-9-2024 திங்கட்கிழமையன்று ஸ்ரீ ரமணாச்ரமத்தில் முருகனார் ஆராதனை அனுசரிக்கப்பட்டது. அன்னாரது சமாதிக்கு சிறப்பு அபிஷேக அலங்காரங்கள் கிரமமாக நடைபெற்றன. அன்பர்கள் முருகனார் இயற்றிய பாடல்கள் மற்றும் அக்ஷரமணமாலை பாராயணம் செய்தனர். அன்றைய தினம் மாலையில் ஸ்ரீ சத்குருநாத ஓதுவார், முருகனார் பகவான்மேல் இயற்றிய பாடல்கள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து இசைத்தார். ஆராதனை மற்றும் இசைநிகழ்ச்சியில் திரளான அன்பர்கள் கலந்து கொண்டு பயனுற்றனர்.*



## ஸ்ரீ ரமணாலயம், குரோம்பேட்டை

*ஸ்ரீ ரமணாஸ்ரமத்திற்கு பாத்தியப்பட்ட குரோம்பேட்டை ரமணாலயத்தில், ஒவ்வொரு மாதமும் பகவானது ஜன்ம நக்ஷத்திரமான புனர்வசு தினத்தன்று மாலை 5 மணி முதல் 7.30 மணிவரை புனர்வசு பூஜை, வேதபாராயணம் மற்றும் ஸ்ரீ ரமண அஷ்டோத்திரத்துடன் துவங்கி, ஸ்ரீ ரமண சந்நிதிமுறை மற்றும் ரமண சிறப்புப் பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வண்ணம் ரமண இன்னிசை நிகழ்ச்சி நடைபெறுகின்றது. நிகழ்ச்சியின் நிறைவாக, திரளாகக் கலந்து கொள்ளும் சுமார் 300 அன்பர்களுக்கு பிரசாதம்/அன்னம் பாலித்தல் நடைபெறுகிறது.*

## ஸ்ரீ ரமணாஸ்ரமம், திருவண்ணாமலை
## தகவல் மற்றும் தொடர்புக்கு

For Website: https://www.gururamana.org

For Accommodation: https://stay.gururamana.org

For Parayana: https://parayana.gururamana.org

For Search: https://search.gururamana.org

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

*Printed and Published by:* A. Kumar Raja,
20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.







ஆகஸ்ட் 17, 2024 அன்று சென்னையில் நடைபெற்ற
ஸ்ரீ ரமணாஸ்ரம நூற்றாண்டு நிறைவு விழாக் காட்சிகள்

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

